# அத்தியாயம் 2
# தேசிய வருமானமும் செலவும்

## 2.1 பொதுவான போக்குகள்

2002 இன் இரண்டாம் அரைப்பகுதியில் தொடங்கிய மீட்சிச் செயற்பாட்டைத் தொடர்ந்து 2003 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி உண்மை நியதிகளில் 5.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சி, ஆண்டின் தொடக்கத்தில் எதிர்வு கூறப்பட்ட 2003 இற்கான 5.5 சதவீத வளர்ச்சியைக் காட்டிலும் சிறந்ததாகும். 2003 ஆம் ஆண்டில் காலாண்டு வளர்ச்சி வீதமானது 5.4 சதவீதத்திற்கும், 6.9 சதவீதத்திற்கு மிடையிலான வீச்சில் உறுதியாக விளங்கி 1996 இல் காலாண்டு தேசிய கணக்குகளின் திரட்டல் தொடங்கிய பின்னர் ஆண்டொன்றில் காணப்பட்ட மிக உறுதியான காலாண்டு வளர்ச்சி வீதமாக காணப்பட்டது. ஒப்பிடுகையில், 2001 இல் வீச்சு -3.9 சதவீதத்திலிருந்து 1.8 சதவீதத்திற்கும் 2002 இல் வீச்சு 0.3 சதவீதத்திலிருந்து 7.0 சதவீதத்திற்கு வேறுபட்டு காணப்பட்டது. இதற்கும் மேலாக, பெரும்பாலான துணைத்துறைகள் முன்னைய ஆண்டை விட இவ்வாண்டில் விரைந்த வேகத்தில் வளர்ச்சியடைந்ததால் இவ்வளர்ச்சி ஆண்டு முழுவதிலும் அனைத்து மூன்று முக்கியப் பொருளாதாரத் துறைகளிலும் பதிவு செய்யப்பட்டது. இப்புள்ளிவிபரங்கள், 2003 முழுவதிலும் பொருளாதார நடவடிக்கையில் நிலவிய உறுதிப்பாட்டையும், எதிர்வுகூறல் தன்மையினையும் பிரதிபலித்தன. முன்னேற்றமடைந்த பேரண்டப் பொருளாதார அடிப்படைகளுக்கு பதிலிறுக்கும் வகையில் அமைந்த பரந்தளவிலான உறுதியான பொருளாதார வளர்ச்சியின் நீண்டகாலம் நிலைத்து நீடித்திருக்கும் தன்மைக்கான உள்ளார்ந்த வளத்தினையும் இவை அழுத்தி உணர்த்தின.

வரைபடம் 2.1
காலாண்டு வளர்ச்சி வீதங்கள்




2002 இல் பொருளாதாரம் 2001 இல் நிலவிய மந்த நிலையிலிருந்து மீட்சியடைந்ததுடன், இவ்வளர்ச்சியானது 2000 இல் நிலவிய உண்மை நியதிகளிலான தலைக்குரிய வருமானத்தை மீள நிலைநிறுத்துவதற்கு போதுமானதாக இருந்தது. 2003 இறுதியில் தலைக்குரிய வருமானம் பெயரளவு நியதிகளில் கிட்டத்தட்ட 10 சதவீதத்தால் அதிகரித்து ஏறத்தாழ 5 சதவீதம் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியுடன் இணைந்து தலைக்குரிய வருமானத்தில் 4.6 சதவீத உண்மை அதிகரிப்பை பிரதிபலித்து, சராசரியான வாழ்க்கைத் தரங்களில் முன்னேற்றத்தை குறிப்பிட்டுக் காட்டுகிறது.

2003 இல் எய்தப்பட்ட வளர்ச்சிக்கு இரு முக்கிய காரணிகள் உதவியளித்தன. முதலாவது காரணியாக, நாடு முழுவதும் பொருட்கள், பணிகள் மற்றும் தொழிலாளரின் ஒப்பீட்டு ரீதியான சுதந்திரமான நகர்வினை இயலச் செய்ததன் மூலம் பொருளாதார நடவடிக்கையை தொடர்ச்சியான போர்நிறுத்தம் மற்றும் சமாதான முன்னெடுப்பு என்பன விரிவுபடுத்தியது. இரண்டாவது காரணியாக, வீழ்ச்சியடைந்து செல்லும் வட்டி வீதங்கள், உறுதியான வெளிநாட்டு செலாவணிச்சந்தை மற்றும் வீழ்ச்சியடையும் பணவீக்கம் என்பவற்றுக்கு உதவியளித்த சில துறைகளிலான தாமதங்களுடனான அமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் பாரிய இறைக்கட்டுப்பாடு மற்றும் முன்மதியுடைய நாணய முகாமைத்துவம் உள்ளிட்ட மேம்பட்ட பேரண்டப் பொருளாதார முகாமைத்துவம் விளங்குகின்றது. இது, நுகர்வோர் மற்றும் முதலீட்டாளர் ஆகிய இருவரினதும் நம்பகத்தன்மையில் ஏற்பட்ட அதிகரிப்பினூடாக மொத்தக்கேள்வி மற்றும் வழங்கலில் அதிகரிப்புக்களை ஏற்படுத்தியது. அத்துடன், மே மாதத்தில் எதிர்கொள்ளப்பட்ட கடும் வெள்ளப்பெருக்குக்கு மத்தியிலும் சாதகமான வானிலை நிலைமைகள் வேளாண்மையின் நேர்க்கணிய வளர்ச்சிக்கும் ஆண்டு முழுவதும் தடங்கலற்ற வலு வழங்கலுக்கும் பங்களிப்புச் செய்தது. முன்னேற்றமடைந்து மேம்பட்டு வரும் பன்னாட்டு பொருளாதாரச் சூழலும் 2003 இல் பொருளாதார நடவடிக்கை மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

இதேவேளை, வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய்க்குச் சீராக்கம் செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி என வரைவிலக்கணம் செய்யப்படும் மொத்த தேசிய உற்பத்தி 2002 இன் 4.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் உண்மை நியதிகளில் 6.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தின் சிறந்த செயலாற்றம் காரணமாக 2003 இல் வரலாற்று ரீதியான போக்கினைக்

காட்டிலும் பாரிய வேறுபாட்டுடன் மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை விட உயர்ந்து காணப்பட்டது. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் எதிர்க்கணியமாக விளங்கியபோதிலும், கொடுப்பனவுகளை விட உயர் வீதத்தில் அதிகரித்துச்செல்லும் பெறுகைகள் காரணமாக 26 சதவீதத்தால் மேம்பாடடைந்தது. 2002 உடன் ஒப்பிடுகையில் நாட்டின் உயர் வெளிநாட்டு ஒதுக்குகள் காரணமாக 2003 இல் வட்டி வருமானங்கள் அதிகரித்திருக்கையில் மேம்பட்ட ஒதுக்கு முகாமைத்துவமும் இவ்வதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்தது.

2003 இல் பொருளாதார வளர்ச்சி பரந்த அடிப்படையில் அமைந்திருந்தது. வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் ஆகிய அனைத்து மூன்று துறைகளும் வளர்ச்சியடைந்து பொதுவான பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. எனினும், பணிகள் துறை பெருமளவு பங்களிப்பினைச் செலுத்தியது. பணிகள் செயற்பாடுகள் 7.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து வளர்ச்சியின் 70 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன. நுகர்வோர் நம்பகத்தன்மையிலான மீள்எழுச்சியானது, வர்த்தகம், சுற்றுலா விடுதிகள், களிப்பூட்டல் மற்றும் அவை சார்ந்த நடவடிக்கைகள், தொடர்பூட்டல், பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து, நிதி மற்றும் துறைமுகப்பணிகள் போன்ற பணிகளுக்கான கேள்வியை அதிகரித்ததுடன் இப்பணிகள் அனைத்தும் உறுதியாக வளர்ச்சியடைந்தன. நடுத்தர கால இறைத்திரட்சி உத்தியின் ஒரு பகுதியாக அத்தியாவசியமானதெனக் கருதப்பட்டாலன்றி அரச துறையிலான விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான

**அட்டவணை 2.1**

**நிலையான (1996) விலைகளில் மொத்தத் உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும்**

| துறை | அதிகரிப்பு வீதம் (%) | | மொத்த உள்நாட்டு உற்பத்தி மாற்றங்களுக்கான பங்களிப்பு (%) | | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதப் பங்கு (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2002(அ) | 2003(ஆ) | 2002(அ) | 2003(ஆ) | 2002(அ) | 2003(ஆ) |
| **1. வேளாண்மை** | **2.5** | **1.5** | **12.7** | **5.0** | **19.8** | **19.0** |
| **1.1 வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில்** | **2.5** | **1.5** | **12.7** | **5.0** | **19.8** | **19.0** |
| வேளாண்மை | 1.9 | 3.0 | 7.5 | 7.7 | 15.1 | 14.7 |
| தேயிலை | 5.1 | -2.2 | 1.8 | -0.5 | 1.4 | 1.3 |
| இறப்பர் | 5.0 | 1.7 | 0.5 | 0.1 | 0.4 | 0.4 |
| தெங்கு | -13.6 | 7.1 | -5.3 | 1.5 | 1.3 | 1.3 |
| நெல் | 5.1 | 7.4 | 4.0 | 3.9 | 3.1 | 3.2 |
| ஏனையவை | 2.9 | 1.8 | 6.6 | 2.7 | 8.9 | 8.6 |
| காட்டுத்தொழில் | 1.9 | 1.4 | 0.9 | 0.4 | 1.9 | 1.8 |
| கடற்றொழில் | 6.3 | -6.9 | 4.3 | -3.2 | 2.7 | 2.4 |
| **2. கைத்தொழில்** | **1.0** | **5.5** | **6.6** | **24.9** | **26.6** | **26.5** |
| **2.1 சுரங்கம் அகழ்தலும் கல்லுடைத்தலும்** | **-1.1** | **3.6** | **-0.5** | **1.0** | **1.7** | **1.7** |
| **2.2 தயாரிப்புத் தொழில்** | **2.1** | **4.4** | **8.8** | **12.4** | **16.6** | **16.4** |
| தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டுப் பதனிடல் | -0.9 | 2.2 | -0.5 | 0.7 | 1.9 | 1.8 |
| தொழிற்சாலைக் கைத்தொழில் | 2.5 | 4.6 | 8.6 | 10.4 | 13.5 | 13.3 |
| சிறு கைத்தொழில் | 2.1 | 6.1 | 0.7 | 1.3 | 1.2 | 1.2 |
| **2.3 கட்டடவாக்கம்** | **-0.8** | **5.5** | **-1.5** | **6.4** | **6.9** | **6.9** |
| **2.4. மின்வலு, வாயு, நீர் மற்றும் சுகாதார பணிகள்** | **-0.7** | **21.7** | **-0.3** | **5.1** | **1.4** | **1.6** |
| மின்வலு | -1.5 | 25.3 | -0.5 | 5.0 | 1.2 | 1.4 |
| நீர், வாயு | 3.8 | 1.4 | 0.2 | 0.0 | 0.2 | 0.2 |
| **3. பணிகள்** | **6.1** | **7.7** | **80.7** | **70.1** | **53.6** | **54.5** |
| **3.1 போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல்** | **7.6** | **10.2** | **23.8** | **22.1** | **12.8** | **13.3** |
| துறைமுகப் பணிகள் | 2.4 | 10.8 | 0.5 | 1.4 | 0.8 | 0.8 |
| தொலைத் தொடர்பூட்டல் | 19.3 | 24.5 | 15.6 | 15.2 | 3.7 | 4.3 |
| போக்குவரத்து | 3.6 | 3.8 | 7.7 | 5.4 | 8.4 | 8.2 |
| **3.2 மொத்த, சில்லறை வர்த்தகம்** | **5.6** | **7.3** | **29.5** | **26.3** | **21.3** | **21.6** |
| இறக்குமதி | 8.4 | 11.2 | 19.1 | 17.8 | 9.4 | 9.9 |
| ஏற்றுமதி | 2.0 | 3.5 | 1.3 | 1.5 | 2.5 | 2.4 |
| உள்நாடு | 3.9 | 4.4 | 9.2 | 7.0 | 9.4 | 9.3 |
| **3.3 வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து** | **11.1** | **10.6** | **23.2** | **15.9** | **8.9** | **9.2** |
| வங்கித்தொழில் | 17.7 | 15.3 | 14.9 | 9.7 | 3.8 | 4.1 |
| காப்புறுதி, உண்மைச்சொத்தும் நிதியியல் பணிகளும் | 6.6 | 7.1 | 8.3 | 6.2 | 5.1 | 5.1 |
| **3.4 குடியிருப்புக்களின் உடைமை** | **1.5** | **1.3** | **0.7** | **0.4** | **1.8** | **1.7** |
| **3.5 பொது நிருவாகமும் பாதுகாப்பும்** | **0.0** | **0.6** | **0.0** | **0.5** | **4.8** | **4.5** |
| **3.6 பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை)** | **3.4** | **7.2** | **3.5** | **5.0** | **4.1** | **4.1** |
| உணவகங்களும் சிற்றூண்டிச்சாலைகளும் | -1.1 | 22.0 | -0.2 | 2.1 | 0.6 | 0.6 |
| ஏனையவை | 4.1 | 4.8 | 3.7 | 2.9 | 3.5 | 3.5 |
| **4. மொத்த உள்நாட்டு உற்பத்தி (1+2+3)** | **4.0** | **5.9** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |

(அ) திருத்தியமைக்கப்பட்டது

(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொள்கைத் தீர்மானத்தைத் தொடர்ந்து அரச நிருவாகமும் பாதுகாப்பும் விதிவிலக்காக இருந்தது. விரைந்து வளர்ச்சியடையும் துறையாக பணிகள் துறை தோற்றம்பெற்று வருவது இலங்கைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. 2003 இல் பணிகள் துறை இந்தியா மற்றும் கிழக்காசியப் பொருளாதாரங்களின் வளர்ச்சிக்கான தூண்டுதலை வழங்கியது. இதேவேளை, முன்னைய ஆண்டில் 1.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த கைத்தொழிற்றுறை 2003 இல் 5.5 சதவீத வளர்ச்சியுடனும் மொத்த வளர்ச்சிக்கான 25 சதவீதப் பங்களிப்புடனும் அதன் வளர்ச்சி விசைப்போக்கினை ஓரளவு மீளப் பெற்றுக் கொண்டது. கைத்தொழிலிலான மீட்சி, தொடர்பான பணிகளுக்கான கேள்வியை அதிகரித்து பணிகள் துறையின் மீது சாதகமான தாக்கத்தை ஏற் படுத்தியது. எனினும், இவ்வளர்ச்சி 2001 இற்கு முற்பட்ட கைத்தொழில் துறையின் சராசரி வளர்ச்சி வீதத்தைக் காட்டிலும் இன்னமும் குறைவாகவே காணப்படுகிறது. வேளாண்மைத்துறை 1.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. பாதகமான வானிலை நிலைமைகளின் கீழ் 2001 இல் 3.4 சதவீதத்தால் சுருக்கமடைந்த இத்துறை 2002 இல் 2.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2003 இன் இவ்வளர்ச்சியானது 2001 இன் சுருக்கத்திலிருந்து வேளாண்மைத்துறை முழுமையாக மீட்சி பெற்றதனை உறுதி செய்கிறது. எனினும், இத்துறையிலான வளர்ச்சி ஏனைய இரண்டு துறைகளின் இயக்கவாற்றலை எய்தாததுடன் அதனுள்ளேயுள்ள இறுக்கமான தன்மை காரணமாக பின்தங்கிய நிலையில் தொடர்ந்து காணப்படுகிறது.

செலவினப் பக்கத்தில், 2003 இல் நடைமுறைச் சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி, 2002 இன் ரூ.1,583 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,760 பில்லியனாக விளங்கி பெயரளவு நியதிகளில் 11.2 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளதாக மதிப்பிடப்பட்டது. உண்மையான பொருளாதார நடவடிக்கைகளிலான அதிகரிப்பு 5.9 சதவீதமாக இருக்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியால் அளவிடப்படும் பொதுவான விலைமட்டத்திலான அதிகரிப்பு 2002 இன் 8.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2003 இல் 5.0 சதவீதமாக விளங்கியது. உயர்ந்த கேள்வியை ஈடுசெய்யும் விதத்தில் அதிகரித்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் மேம்பட்ட பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு என்பனவற்றினூடாக ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்த பணவீக்க மட்டம் எய்தப்பட்டது. பணவீக்கத்தின் வீழ்ச்சியடைந்துசெல்லும் போக்கு ஏனைய அனைத்து விலைச்சுட்டெண்களிலும் பிரதிபலிக்கப்பட்டது. இதன்படி, 2003 இற்கான தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற பத்தி முன்னைய ஆண்டின் ரூ.83,267 இனைக் காட்டிலும் 9.8 சதவீதத்தால் அதிகரித்து ரூ.91,434 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, தலைக்குரிய வருமானத்தின் வளர்ச்சி பணவீக்கத்தின் அதிகரிப்பை விஞ்சியமைந்த மையால் சராசரியாக வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட மேம்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. ஐ.அ.டொலர் நியதிகளில் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி ஐ.அ.டொலர் 870 இலிருந்து 947 இற்கு 8.8 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்பிடுகையில் 2002 இல் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி ஐ.அ.டொலர் நியதிகளில் 3.5 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், 2001 இல் 6.4 சதவீதத்ததால் வீழ்ச்சியடைந்தது. 2003 இன் உயர் அதிகரிப்பானது ஒப்பீட்டளவிலான உயர் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஐ.அ.டொலருக்கெதிரான ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியின் உறுதிப்பாடு என்பவற்றின் இணைந்த விளைவால் ஏற்பட்டதாகும். பணிகளுக்கான அதிகரித்த கேள்வியானது தலைக்குரிய வருமானத்திலான அதிகரிப்புடன் சராசரியாக, உணவு மற்றும் ஆடைகள் போன்ற அடிப்படைத் தேவைகளை திருப்திப்படுத்தும் பொருட்களிலிருந்து நுகர்வுச் செலவினத்தின் சார்புரீதியான பங்கொன்று அவர்களின் விருப்புத் தெரிவின் அடிப்படையிலமைந்த பணிகள்

வரைபடம் 2.2
2003 இல் பொருளாதாரம் (நடைமுறை விலைகளில்)



மீதான நுகர்வுச் செலவினத்துக்கு மாறிச்செல்வதைப் பிரதி பலிக்கின்றது.

செலவின அணுகுமுறையின்படி மதிப்பிடப்படும் பொழுது, சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கேள்வியை உள்ளடக்கியிருக்கும் பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வியைப் பிரதிபலிக்கின்றது. உள்நாட்டுக் கேள்வி (நுகர்வு மற்றும் முதலீட்டுக் கேள்வி) நடைமுறைச் சந்தை விலைகளில் 10.9 சதவீதத்தால் அதிகரித்தது. 2002 இல், இது தொடர்பான அதிகரிப்பு 13.1 சதவீதமாக விளங்கியது. எனினும், பணவீக்கத்தின் வீழ்ச்சியுடன், உண்மையான உள்நாட்டுக்கேள்வி 2002 இனை விட 2003 இல் கூடிய வேகத்தில் வளர்ச்சியடைந்து பொருளாதாரத்தில் உண்மைக் கொள்வனவு வலுவில் ஏற்பட்ட அதிகரிப்பை எடுத்துக்காட்டுகிறது.

இதற்கு முன்னெப்பொழுதுமிருந்திராத 2001 இல் ஏற்பட்ட பொருளாதார சுருக்கத்திலிருந்து 2002 இல் ஏற்பட்ட மீட்சியானது நுகர்வோர் நம்பகத்தன்மையால் வழிப்படுத்தப்பட்டதாகும். மோதல்கள் முடிவுக்கு வந்தமை மற்றும் இதனால் நாட்டில் நிலவிய சமாதானச்சூழல் என்பன நுகர்வினால் உந்தப்படும் வளர்ச்சிக்கு வழியமைத்தன. 2002 இன் 6.6 சதவீதம் கொண்ட மொத்த உள்நாட்டுக் கேள்வி வளர்ச்சியில் கிட்டத்தட்ட 80 சதவீதத்திற்கும் மேலானவை அதிகரித்த நுகர்வுச் செலவினத்திலிருந்து பெறப்பட்டது. முதலீட்டாளர்களின் பிரதிபலிப்பு விரைந்ததாக காணப்படாததுடன் 2002 இல் சமாதான முன்னெடுப்புக்களின் வெற்றியிலிருந்தான உறுதியான சமிக்ஞைகளை முதலீட்டாளர்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள் என்பதன் மூலம் உறுதியாகின்றது. முதலீட்டாளர் நம்பகத்தன்மையில் எதிர் பார்க்கப்பட்ட வளர்ச்சி 2003 இன் பின்னரைப் பகுதியில் காணப்பட்டது.

வரைபடம் 2.3
முதலீடு மற்றும் சேமிப்பு விகிதங்கள்




நுகர்வோர் நம்பகத் தன்மையிலான 2002 இல் காணப்பட்ட வளர்ச்சி 2003 இலும் ஓரளவு குறைந்த வேகத்தில் தொடர்ந்தது. தனியார் மற்றும் அரச நுகர்வுச் செலவினத்தை உள்ளடக்கிய மொத்த நுகர்வுச் செலவினம் நடைமுறை நியதிகளில் 9.6 சதவீதத்தால் அதிகரித்தது: இவ்வதிகரிப்பானது, மொத்தத்தில் கிட்டத்தட்ட 91 சதவீதத்தைக் கொண்டிருக்கும் தனியார் நுகர்வுச் செலவினத்திலான 10.7 சதவீத அதிகரிப்பால் மட்டுமே ஏற்பட்டது. அரச நுகர்வுச் செலவினம், பாராட்டத்தக்க இறைத்திரட்சி முயற்சிகள் காரணமாக சிறிதளவால் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. உண்மை நியதிகளில் மொத்த நுகர்வுச் செலவினம் 6.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து உண்மைப் பொருளாதார வளர்ச்சியை விஞ்சிக் காணப்பட்டது. நாடு முழுவதிலுமான போர்நிறுத்தம், பொருட்கள் மற்றும் பணிகளுக்கான கேள்வியை அதிகரித்த முதன்மைக் காரணியாகும். உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பு, வீழ்ச்சியடைந்து செல்லும் பணவீக்கம் மற்றும் வீழ்ச்சியடைந்து செல்லும் வட்டி வீதங்கள் என்பன நுகர்வோர் கேள்வியை மேலும் ஊக்குவித்தின. அதிகரித்த உற்பத்தி காரணமாக உள்நாட்டு வேளாண்மை வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்களும் 2003 இல் நீண்டகால நுகர்வுப் பொருட்களுக்கான கேள்வியை அதிகரித்தன. உள்நாட்டுச் சந்தைக்கு வழங்கல் செய்யும் வேளாண்மை உற்பத்திகள் உள்நாட்டுச்சந்தை சார்ந்த கைத்தொழில்களிலான அதிகரிப்பு அளவு நியதிகளில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட 12.5 சதவீத அதிகரிப்பு என்பனவும், 2003 இல் உண்மை நியதிகளிலான, உயர் நுகர்வுச் செலவினத்தைப் பிரதிபலித்தன. 1.3 சதவீத குடித்தொகை வளர்ச்சிக்கெதிராக தனியார் நுகர்வுச் செலவினம், உண்மை நியதிகளில் 7.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து வாழ்க்கைத் தரங்களில் ஏற்பட்ட முன்னேற்றத்தை எடுத்துக்காட்டியது. நுகர்வுச் செலவினமானது 2003 இன் உள்நாட்டுக் கேள்வியின் 8.4 சதவீதங்கொண்ட வளர்ச்சியின் 58 சதவீதத்திற்குப் பொறுப்பாக விளங்கியது.

2002 இல் 9.1 சதவீதத்தால் அதிகரித்த நடைமுறைச்சந்தை விலைகளிலான முதலீட்டுச் செலவினம் (மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம்) 2003 இல் 16.3 சதவீதத்தால் மேலும் அதிகரித்தது. உண்மை நியதிகளில், முதலீட்டுச் செலவினம் 17.0 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் 2002 இலான இதன் வளர்ச்சி 6.7 சதவீதமாக காணப்பட்டது. நடைமுறை நியதிகளுடன் ஒப்பிடுகையில், 2003 இல் உண்மை நியதிகளில் முதலீட்டிலேற்பட்ட உயர் வளர்ச்சியானது, 2002 இன் விலைகளுடன் ஒப்பிடுகையில் 2003 இல் முதலீட்டுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. 2002 உடன் ஒப்பிடுகையில் உண்மை வளர்ச்சியானது பல துறைகளிலும் பிரதிபலிக்கப்பட்டு முன்பு நுகர்வைக்காட்டிலும் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட முதலீட்டுச்சூழல் 2003 அளவில் கணிசமாக மேம்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியது. முதலீடு/மொ.உ.

உற்பத்தி விகிதம் 2000 இன் 28.0 சதவீதத்திலிருந்து 2001 இல் 22.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2002 இல் பொருளாதாரம் 4.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த போதிலும் முதலீட்டு விகிதம் மேலும் 21.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து முதலீட்டுத் தீர்மானங்களிலான தாமதத்தை எடுத்துக்காட்டியது. 2002 இல் புதிய முதலீட்டைத் தாமதப்படுத்திய மற்றுமொரு காரணியாக பெரும்பாலான பொருளாதாரத் துறைகளில் காணப்பட்ட மிகை இயலளவு விளங்கியது. 2003 இல் இப்போக்கு மாற்றமடைந்ததுடன் முதலீட்டு விகிதம் 22.3 சதவீதத்திற்கு அதிகரித்து வளர்ச்சியடைந்து வரும் முதலீட்டாளர் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தியது. முதலீட்டிலான முழுமையான மாற்றமானது இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் தனியார்துறை கொடுகடனில் ஏற்பட்ட உறுதியான வளர்ச்சி மற்றும் இக்காலப்பகுதியில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளிலேற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு என்பவற்றால் எடுத்துக்காட்டப்பட்டதிலிருந்து அவதானிக்கப்பட்டது. எனினும், முதலீட்டு விகிதம், இவ்வாண்டின் ஆரம்பத்தில் 2003 இற்காக எறிவு செய்யப்பட்ட 24 சதவீத மட்டத்திற்கு கீழேயே இன்னமும் காணப்படுகிறது. மூலதன உருவாக்கத்தின் குறைந்த செயலாற்றம் இரண்டு முக்கிய காரணங்களால் ஏற்பட்டது. முதலாவதாக, சில முக்கிய பொருளாதாரத்துறைகள் (ஏற்றுமதித் தயாரிப்பு மற்றும் சுற்றுலா) ஏற்கனவே இருக்கும் இயலளவை விட இன்னமும் குறைந்தளவிலேயே செயலாற்றியதால் இத்துறைகளில் புதிய முதலீடுகளுக்கான உடனடித் தேவை எதுவும் இருக்கவில்லை. இரண்டாவதாக, மோதல் நிறுத்தமும் தொடர்ந்து நாடு முழுவதும் சமாதானச்சூழலும் நிலவிய போதிலும் சமாதான முன்னெடுப்பு மற்றும் அரசியற் சூழல் இரண்டிலும் நிலவிய நிச்சயமற்ற தன்மைகள் காரணமாக, முதலீட்டாளர்கள் முதலீட்டுத் தீர்மானங்களை எடுப்பதில் "பொறுத்திருந்து பார்க்கும்" கொள்கையைப் பின்பற்றிய மையாகும். 22.3 சதவீதம் கொண்ட முதலீட்டு மட்டமானது, வாழ்க்கைத் தரங்களின் நீடித்து நிலைத் திருக்கக்கூடிய முன்னேற்றத்திற்குத் தேவையான 8 சதவீதத்திற்கும் மேலான நீண்டகால எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியை எய்துவதற்கு போதுமானதல்ல. நீண்டகாலத்தில், வலு இயலளவு விரிவாக்கத்தின் விரைந்த அமுலாக்கம், தொழிற்சந்தை மற்றும் காணிச் சந்தைச் சீர்திருத்தங்கள், நிருவாகத் தடைகளைக் குறைப்பதற்காக ஒழுங்குவிதிகளை மேலும் தளர்த்தல் மற்றும் கொள்கையின் முரண்பாடற்ற தன்மையிலான மேலதிக முன்னேற்றம் என்பன அதிகரித்துச் செல்லும் முதலீட்டாளர் நம்பகத்தன்மையை உண்மையான முதலீட்டு நடவடிக்கைக்கு மாற்றுவதற்கு அத்தியாவசியமாகும்.

மூலப்பக்கத்தில், தனியார் மற்றும் அரச சேமிப்புக்களின் மொத்தத் தொகையான உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ.277 பில்லியனாக விளங்கி, பெயரளவு நியதிகளில் 20.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் கொண்டிருந்தன. 2002 இல் இதன் அதிகரிப்பு 3.3 சதவீதமாகும். உள்நாட்டுச் சேமிப்புக்களிலான அதிகரிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியை விஞ்சியதால் உள்நாட்டுச் சேமிப்புக்கள்/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2002 இன் 14.5 சதவீதத்திலிருந்து 2003 இல் 15.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. தனியார்துறை மற்றும் அரசதுறை ஆகிய இரண்டும் இம்முன்னேற்றத்துக்குப் பங்களிப்புச் செய்தன. தனியார் சேமிப்புக்கள் பெயரளவு நிதிகளில் 12.4 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், 18.8 சதவீதமாக விளங்கிய தனியார் சேமிப்பு விகிதம் 19.0 சதவீதத்திற்கு மேம்பாடடைந்தது. தனியார் சேமிப்பில் கம்பனித்துறைச் சேமிப்புக்கள் இக்காலப் பகுதியிலான சிறந்த செயலாற்றம் காரணமாக அதிகரித்தன. எனினும், வீட்டுத்துறைச் சேமிப்புக்கள் இக்காலப்பகுதி முழுவதிலும் நுகர்வுச் செலவினம் காரணமாக வீழ்ச்சியடைந்தன. முன்னைய இரு ஆண்டுகளில் பெருமளவிற்கு அதிகரித்துச் சென்றதன் பின்பு 2002 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.4 சதவீதத்திற்கு சிறிதளவால் முன்னேற்றமடைந்த அரசின் குறைச்சேமிப்புக்கள், மதிநுட்பமான வரவுசெலவுத்திட்டக் கொள்கைகள் தொடர்ந்து பின்பற்றப்பட்டமையால் 2003 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.3 சதவீதத்திற்கு முன்னேற்ற மடைந்தன. 2002 இறுதியில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும், 2006 அளவில் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 சதவீதத்திற்கு குறைப்பதற்கான நடுத்தரகால இறை உத்தியை குறித்துரைத்ததுமான இறை முகாமைத்துவ (பொறுப்பாண்மை) சட்டம், அரசின் குறைச்சேமிப்பிலான முன்னேற்றத்தில் தாக்கத்தைக் கொண்டிருந்தது. தேசிய சேமிப்புக்கள் விகிதமும் 19.5 சதவீதத்திலிருந்து 21.3 சதவீதத்திற்கு அதிகரித்தன. 2002 உடன் ஒப்பிடுகையில் 2003 இல் உள்நாட்டுச் சேமிப்புக்களுக்கும் தேசிய சேமிப்புக்களுக்குமிடையேயான இடைவெளி வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களாலும், வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றல்கள் 10.8 சதவீதத்தால் அதிகரித்தமையாலும் விரிவடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமான முதலீடு - தேசிய சேமிப்புக்கள் இடைவெளியான, மூலவள இடைவெளி 1.0 சதவீதமாக விளங்கியது. இம் மிதமான இடைவெளிக்கு மத்தியிலும், முதலீடு மற்றும் சேமிப்புக்களிலான தாழ்ந்த மட்டங்கள், 2002 இனைக் காட்டிலும் மேம்பட்டிருந்தபோதிலும் ஆண்டுத் தொடக்கத்தில் செய்யப்பட்ட எறிவுகளுக்குக் கீழாக காணப்பட்டதனால் எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் உயர் வளர்ச்சியை எய்துவதற்குப் போதுமானதாக இல்லாமையால் இது கரிசனைக்குரிய விடயமாக இருக்கிறது.

## 2.2 துறைவாரியான செயலாற்றம்

### பணிகள் துறை

பணிகள் துறை 7.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து மொத்த வளர்ச்சியில் 70 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது. 2002 இன் இரண்டாம் அரைப்பகுதியில் தொடங்கிய பொருளாதார நடவடிக்கையின் மீட்சிக்கு பணிகள் துறையின் வளர்ச்சி உந்துதலளித்தது. பணிகள் துறை ஏனைய இரு துறைகளைக்காட்டிலும் இரு அனுகூலங்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக, வர்த்தகம், போக்குவரத்து, சுற்றுலா, நிதிப்பணிகள், துறைமுகப்பணிகள் மற்றும் தொடர்பூட்டல் போன்ற பணிச் செயற்பாடுகளுக்கான கேள்வி தொடர்ச்சியான போர் நிறுத்தத்துடன் நுகர்வோர் நம்பகத்தன்மை அதிகரித்ததன் பின்னணியில் பொருட்களுக்கான கேள்வியைக்காட்டிலும் உயர்வீதமொன்றில் அதிகரித்தமையாகும். இரண்டாவதாக, பொருளாதாரம், ஏற்கனவே இருக்கும் இயலளவுடன் வளர்ச்சியடைந்து வரும் கேள்வியை ஈடு செய்யக்கூடியதாக இருந்தமையாகும்.

பணிகள் துறையின் விரைவான வளர்ச்சியும் இலங்கையின் மொ.உ.உற்பத்தியில் தொடர்ச்சியாக அதிகரித்துவரும் அதன் பங்கும் ஒரு நாட்டின் வழமையான அபிவிருத்திச் செயற்பாட்டுடன் இணங்கிச் செல்வனவாகவுள்ளன. பொருளாதார அபிவிருத்தியின் ஆரம்ப கட்டங்களில் வேளாண்மை மற்றும் கைத்தொழில் துறைகளினால் இடப்பட வேண்டிய உறுதியானதொரு அமைப்பியல் ரீதியான அத்திவாரத்தினை வேண்டி நிற்கின்றன. எனினும் அடுத்தகட்டத்தில் கொடுக்கல் வாங்கல் செலவுகளை குறைவடையச் செய்து, செயற்றிறனை மேம்படுத்துவதன் மூலமாக உற்பத்தி, பகிர்ந்தளிப்பு மற்றும் நுகர்வு என்பனவற்றை ஒன்றாக இணைக்கின்ற அதேவேளை மக்களின் தெரிவுகளை அதிகரித்து வசதிகளை அதிகரிக்கின்றதன் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வினைத்திறன் மிக்க பணிகள் துறையொன்று தேவைப்படுகின்றது. எனவே பணிகள் துறையின் ஆதிக்கமானது வழமையாக நாடு குறைந்த வருமானத்திலிருந்து உயர்ந்த வருமானத்திற்கு வளர்ச்சியடைந்து செல்வதுடன் இணைந்து செல்வதாக இருக்கும். குறிப்பாக, இலங்கை குறைந்த இயற்கை மூலவளத் தளத்தினைக் கொண்டிருப்பதனால், கடந்த அண்மைக் காலத்தில் அவதானிக்கப்பட்டுள்ளவாறு எதிர்கால பொருளாதார வளர்ச்சியின் அளவும் வேகமும் பணிகள் துறையின் மீதே பெருமளவுக்கு தங்கியிருக்கும்.

போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் துறையின் கூட்டப்பட்ட பெறுமதி 2002 இன் 7.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2003 இல் 10.2 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பானது தொலைத்தொடர்பூட்டல் துணைத் துறையிலான 24.5 சதவீதம் கொண்ட விரிவாக்கம் காரணமாக ஏற்பட்டது. நிலையான இணைப்பு - கம்பியில்லாத உள்ளூர் இணைப்பு தொலைபேசியைக் கொண்டிருப்பவர்களின் மட்டங்கள் 2002 இன் 3.8 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. தொலைத் தொடர்பூட்டல் துறையிலான வளர்ச்சி முக்கியமாக 54 சதவீதத்தினால் அதிகரித்த செல்லிடத் தொலைபேசிப் பாவனையிலான மேல்நோக்கிய போக்கால் வழிப்படுத்தப்பட்டதாகும். இணையத்தளம் மற்றும் மின்அஞ்சல் பயன்படுத்துனர்களிலும் 21 சதவீத வளர்ச்சி பதிவு செய்யப்பட்டது. தொலைத்தொடர்பூட்டல் துறையிலான வளர்ச்சி, போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து தொடர்பூட்டல் பணிகளுக்காக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்தான வளர்ச்சியடைந்துவரும் கேள்வியால் மேலும் அதிகரித்தது.

பொருளாதாரத்தின் மிகப்பெரிய பணித்துறைகளில் ஒன்றான போக்குவரத்து துணைத்துறை முன்னைய ஆண்டின் 3.6 சதவீதத்திற்கெதிராக 3.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வதிகரிப்பானது பயணிகள் மற்றும் பொருள் போக்குவரத்தின் இணைந்த செயலாற்றத்தின் விளைவால் ஏற்பட்டதாகும். வீதிவழிப் பொருள் போக்குவரத்து 4.4 சதவீதத்தால் அதிகரித்து போர் நிறுத்தத்தினை தொடர்ந்து வடக்கு மற்றும் கிழக்குக்கான பாதைகள் திறக்கப்பட்டு பாரியளவில் பயன்படுத்தப்பட்டமை, உள்நாட்டு உற்பத்தி மற்றும் பன்னாட்டு வர்த்தகம் என்பன அதிகரித்தமை என்பனவற்றுடன் பொருட்கள் போக்குவரத்து செயற்பாடுகளிலேற்பட்ட முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கின்றது. 2003 இல் இலங்கைப் புகையிரதப் பகுதியால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்கள் 2002 இன் 2.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.4 சதவீதத்தால் அதிகரித்தன. சிறீலங்கன் எயார்லைன்சினால் 2002 இல் பறப்புச் செய்யப்பட்ட பயணிகள் கிலோமீற்றரிலான 5.7 சதவீதம் கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 12.1 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்று பதிவு செய்யப்பட்டது. பொதுப் போக்குவரத்து வகையில், தனியார் பேரூந்து வகையின் வளர்ச்சிச் செயலாற்றம் மேம்பட்ட வேளையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் செயலாற்றம் சுருக்கமடைந்தது. வாடகைக் கார்கள், வாடகை வான்கள், முச்சில்லு வண்டிகள் என்பவற்றின் பாவனையும் அதிகரித்தது. போக்குவரத்துத் துறையிலான இம்முன்னேற்றங்கள், 2002 மற்றும் 2003 இல் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மற்றும் பதிவில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பிலும் பிரதிபலிக்கப்பட்டன.

துறைமுகப்பணிகள் முன்னைய ஆண்டின் 2.4 சதவீதத்திற்கெதிராக 2003 இல் 10.8 சதவீத வளர்ச்சியைப்

பதிவு செய்தன. சவுத்ஏசியா கேற்வே ரேமினல் உள்ளிட்ட கொழும்புத் துறைமுகம் 2003 இல் 1.96 மில்லியன் இருபது அடிகளுக்குச் சமமான அலகுகள் கொள்கலன் அளவைக் கையாண்டதுடன், இது 2002 இன் 1.76 மில்லியன் கொண்ட இருபது அடிகளுக்குச் சமமான அலகுகளுடன் ஒப்பிடுகையில் 10.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகும். இதுவே இத்துறைமுகத்தால் கையாளப்பட்ட ஆகக்கூடிய அளவாக விளங்கியதுடன், கடந்த ஐந்து ஆண்டுகளாக கையாளல் வெளியீட்டில் காணப்பட்ட தேக்கநிலையுடன் ஒப்பிடுகையில் இது கணிசமான சாதனையாகும். 2002 தவிர்ந்த கடந்த ஐந்து ஆண்டுகளில் எதிர்க்கணிய வளர்ச்சியைக் கொண்டிருந்த வழமையான கையாளல் வெளியீட்டில் மூன்றில் இரண்டிற்கு வகைகூறும் மாற்றிக்கப்பலேற்றல் 2003 இல் 12.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2003 இல் கொழும்புத் துறைமுகத்தின் வெற்றிகரமான செயற் பாட்டிற்கு ஜெயா கொள்கலன் முனைக்கோடி முக்கிய உந்துதலையளித்தது. 1.96 மில்லியன் இருபது அடிகளுக்குச் சமமான அலகுகள் கொண்ட மொத்த கொள்கலன் கையாளல் வெளியீட்டில் 68 சதவீதம் (அல்லது 1.33 மில்லியன் இருபது அடிகளுக்குச் சமமான அலகுகள்) ஜெயா கொள்கலன் முனைக்கோடியால் கையாளப்பட்டது. ஜெயா கொள்கலன் முனைக்கோடி மொத்தக் கொள்கலன் கையாளலில் 10.6 சதவீத வளர்ச்சியையும், மாற்றிக் கப்பலேற்றல் கொள்கலன் கையாளலில் 14.2 சதவீத வளர்ச்சியையும் பதிவு செய்தது. இவ்வுயர் வளர்ச்சியானது மிகையாக இருக்கும் தொழிலாளர்களுக்கான சுயவிருப்புடனான ஓய்வூதியத் திட்டம், 24 மணித்தியாலமும் இயங்குவதற்கான வேலை ஒழுங்குகள் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு போன்ற உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக இலங்கை துறை முக அதிகாரசபையால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பிரதிபலிக்கிறது. இலங்கை துறைமுக அதிகாரசபையால் பின்பற்றப்பட்ட சந்தைப்படுத்தும் உத்திகளும், கொழும்புத் துறைமுகத்துக்கு தொடர்ச்சியான அடிப்படையில் பணிகளை வழங்குவதற்கான புதிய கப்பல் நிறுவனங் களைக் கவரக்கூடியதாக இருந்தது.

கூட்டப்பட்ட பெறுமதியின் நியதிகளில் மிகப்பெரிய துறையான மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்துறை 7.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சி பெரும்பாலும் 11.2 சதவீதத்தால் வளர்ச்சி யடைந்த இறக்குமதி வர்த்தகத் துணைத்துறையின் மேம்பட்ட செயலாற்றத்தால் ஏற்பட்டதாகும். 2001 இல் பெரும் பின்னடைவுக்குள்ளான இத்துணைத்துறை உள்நாட்டுக் கேள்வியிலேற்பட்ட அதிகரிப்பு காரணமாக 2002 இல் மீட்சியடைந்தது. இப்போக்கானது, ஆண்டு முழுவதும் தொடர்ந்து நிலவிய நுகர்வோர் நம்பகத் தன்மை மற்றும் 2003 இன் பின்னரைப்பகுதியில் மீட்சி பெற்ற முதலீட்டாளர் நம்பகத்தன்மை என்பன கார ணமாக 2003 இல் தொடர்ந்தது. 2003 இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி அளவு நியதிகளில் 28.7 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி 12.5 சதவீதத்தால் அதிகரித்தது. இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி அளவும், உள்நாட்டுச் சந்தைக்கு பொருட்களை வழங்கும் கைத்தொழில்களுக்கான மூலப்பொருள் இறக்குமதிகளால் முக்கியமாக உந்துதலளிக்கப்பட்டு 4.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. முதலீட்டுப் பொருட்களின் பன்னாட்டு விலைகளிலான 11.7 சதவீத சராசரி வீழ்ச்சியும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியைத் தூண்டின. நுகர்வுப் பொருட்கள் இறக்குமதியில் அரிசி, கோதுமைத்தானியம் மற்றும் சீனி போன்ற அடிப்படை உணவுப் பொருட்களின் இறக்குமதிகள், அரிசி மற்றும் சீனியின் உள்நாட்டு உற்பத்தியிலேற்பட்ட அதிகரிப்புக்கள் மற்றும் பதிலீட்டுத் தாக்கங்களால் வீழ்ச்சியடைந்தன. உந்து ஊர்திகள் மற்றும் வீட்டுப்பாவனைப் பொருட்கள் போன்ற ஏனைய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் 25.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வர்த்தகப்படுத்தப்படும் பொருட் களை விற்றல் என வரைவிலக்கணம் செய்யப்படும் உள்நாட்டு வர்த்தக துணைத்துறை 4.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சியானது நுகர்வோர் நம்பகத் தன்மையிலான அதிகரிப்பு, அதிகரித்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தாழ்ந்த பணவீக்க மட்டம் என்ப வற்றால் தூண்டப்பட்டதாகும். 2001 இல் 8.0 சதவீத பின்னடைவைக் கொண்டிருந்த ஏற்றுமதி வர்த்தகத் துணைத்துறை, 2002 இல் 2.0 சதவீதத்தாலும், 2003 இல் 3.5 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தது. வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதிகள், தெங்குப் பொருட்களின் ஏற்றுமதிகளிலான 24 சதவீத மீட்சியால் வழிப்படுத்தப் பட்டு 5.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிகள் 3.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. கைத்தொழில் ஏற்று மதிகளினுள், இவ்வகையில் ஏறத்தாழ 67 சதவீதத்திற்கு வகைகூறும் புடவைகள் மற்றும் ஆடைகள் துறை 2.5 சதவீதத்தினால் மிதமான அளவில் வளர்ச்சியடைந்தது. இதேவேளை, பெற்றோலியம் நீங்கலான கைத்தொழில் ஏற்றுமதிகளில் 30 சதவீதத்திற்கு வகைகூறும் ஏனைய அனைத்து கைத்தொழில் ஏற்றுமதிகளும் சிறப்பாகச் செயலாற்றி 5.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் ஆகிய இரண்டும் ஆண்டின் ஆரம்பத்தில் 2003 இற்காக செய்யப்பட்ட எறிவுகளை விட சிறப்பாகச் செயலாற்றியுள்ளன.

வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துத்துறை அதியுயர் வளர்ச்சியான 10.6 சதவீதத்தைப் பதிவு செய்தது. இதற்கான முக்கிய பொறுப்பாக 15.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த வங்கித்தொழிற்றுறை விளங்கியது. இத்துறையில்

இன்னமும் 80 சதவீதத்திற்கும் மேலானவற்றை உள்ளடக்கும் வங்கித்துறையிலான வட்டி வருமானம் முன்னைய ஆண்டின் மட்டத்தில் தொடர்ந்து மாறா திருந்தது. எனினும், வட்டிச் செலவுகள் வீழ்ச்சியடைந்துசெல்லும் வட்டி வீதங்களின் கீழ் 16 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து வங்கித்தொழில் துறை யின் தேறிய வட்டி வருமானங்களை அதிகரித்தன. இது, இலங்கையின் வங்கித்தொழில் துறையின் கடன் வழங்கும் வீதங்களிலான கீழ்நோக்கிய நெகிழாத்தன்மையை மேலும் பிரதிபலித்து பொதுவாக பொருளாதாரத்திலும் குறிப் பாக முதலீட்டாளர்களுக்கும் குறைந்த வட்டி வீதங்களின் நன்மைகள் மெதுவாகவே சென்றடைவதனை தெளிவாக வெளிக்காட்டியது. இதேவேளை, நடைமுறை நியதிகளில் வங்கித்தொழில் துறையின் வட்டியல்லா வருமானம் 27 சதவீதத்தால் அதிகரித்தது. வெளிநாட்டு செலாவணிச் சந்தை செயற்பாடுகளிலிருந்தான அதிகரித்த இலாபங்களும், கட்டண அடிப்படையிலான செயற் பாடுகளிலிருந்தான அதிகரித்த தரகு மற்றும் தரகு வருமானம் என்பனவே இவ்வதிகரிப்புக்கான முக்கிய காரணிகளாகும். உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கித் தொழிற்றுறை இவ்வாண்டின் பெரும்பாலான காலப்பகுதிகளில் முக்கியமாக பங்குச் சந்தையிலேற்பட்ட செழிப்பு காரணமாக பிணையங்களின் விற்பனை களிலிருந்து முக்கியமாக நன்மையடைந்தன. காப்புறுதி, உண்மைச்சொத்து மற்றும் ஏனைய நிதியியல் பணித் துறையும் 7.1 சதவீதத்தால் சிறப்பாக வளர்ச்சியடைந்து, 2002 இலும் 6.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்த அவ்வாறான பணிகளுக்கான தொடர்ச்சியான கேள்வியை பிரதிபலித்தது.

தனியார் கல்வி, நலம், சுற்றுலாவிடுதிகளும் உணவுச்சாலைகளும், விளம்பரப்படுத்தல், தனியார் பாதுகாப்பு, சுத்தப்படுத்தல் பணிகள், தனியாள் பணிகள் மற்றும் ஏனைய அனைத்து வியாபாரப் பணிகளை உள்ளடக்குகின்ற பணிகள் (வேறெங்கும் குறிப் பிடப்படாதவை) வகை 7.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இது, சுற்றுலா விடுதி மற்றும் உணவுச்சாலைப் பணிகள் அத்துடன் விளம்பரப்படுத்தல் மற்றும் குறைந்தளவில் காணப்பட்ட உந்து ஊர்தி மற்றும் மின்சார திருத்த வேலைகள் போன்ற ஏனைய துணைத்துறைகள் என்பவற்றின் அதிகரித்த செயற்பாடுகளினாலும் ஏற்பட்டது. சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவுச்சாலைகள் பணிகள், முக்கியமாக மேற்கு ஐரோப்பா மற்றும் ஆசியாவிலிருந்தான சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட அதிகரிப்புடன் குறிப் பிடத்தக்களவில் விரிவடைந்தன. 2003 இல் சுற்றுலா வருகைகள் 27.3 சதவீதத்தால் 500,642 இற்கு அதிகரித்தன. மேற்கு ஐரோப்பாவிலிருந்தான வருகைகள் 27.4 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் ஆசியப் பிராந் தியத்திலிருந்தான வருகைகள் 24.0 சதவீதத்தால் அதிகரித்தன. ஐக்கிய இராச்சியத்திலிருந்தான 93,278 வருகைகளையடுத்து, இந்தியா 90,603 வருகைகளுடன் இரண்டாவது முக்கிய சுற்றுலாச் சந்தையாக அதன் நிலையைத் தொடர்ந்து பேணியது. சுற்றுலா விடுதிகள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த தங்கி யிருத்தலிலிருந்து அவற்றின் இலாபத்தன்மையை அதிகரிக்கக்கூடியதாக இருந்தன. இவ்வாண்டில் வெளிநாட்டு விருந்தினர் இரவுகள் 2002 இல் பதிவு செய்யப்பட்ட சிறு வீழ்ச்சியிலிருந்து 32.9 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் அனைத்து தரமிடப்பட்ட சுற்றுலா விடுதிகளிலுமான உள்நாட்டு விருந்தினர் இரவுகள் 7.5 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இதனால் 2003 இல் சுற்றுலாவிடுதி மற்றும் உணவுச்சாலைகள் பணிகள், உண்மை நியதிகளில் 22.0 சதவீதத்தால் வளர்ச்சி யடைந்தன. விளம்பரப்படுத்தல் துணைத்துறை அதிகரித்துச்செல்லும் நுகர்வோர் கேள்வி மற்றும் பல துறைகளில் வழங்குநர்களிடமிருந்து எழும் போட்டி என்பன காரணமாக 2003 இல் 13.6 சதவீதம் கொண்ட செழிப்பான வளர்ச்சியைப் பதிவு செய்தது. அண்மைக் காலமாக உந்து ஊர்திகள், உந்து ஈருருளிகள், தனியாள் மற்றும் வீட்டுப்பாவனைப் பொருட்களின் இறக்கு மதியிலான விரைந்த அதிகரிப்பைத் தொடர்ந்து அப்பொருட்களின் பழுதுபார்த்தல்கள் 11.7 சதவீதத்தால் அதிகரித்தன.

## கைத்தொழில் துறை

தயாரிப்பு, கட்டடவாக்கம், சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் மற்றும் மின்வலு, வாயு, நீர் என்ப வற்றை உள்ளடக்கிய கைத்தொழிற்றுறை 2003 இல் 5.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து மொத்த வளர்ச்சியின் 25 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது. 2001 இல் 2.1 சதவீதத்தால் சுருக்கமடைந்த இத்துறை 2002 இல் 1.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இப்பின்னணியில் 2003 இல் கைத்தொழிற்றுறையின் செயலாற்றம் 2001 இன் பின்னடைவிலிருந்து முழுமையாக மீட்சிய டைந்தமையை எடுத்துக்காட்டுகிறது. அனைத்து துணை வகைகளும் மீட்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

கைத்தொழிலில் மிகப்பெரிய துணைத் துறையான தயாரிப்புத்துறை 2003 இல் 4.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. தொழிற்சாலைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழிலிலான வளர்ச்சி இவ்வளர்ச்சிக் கான முக்கிய பொறுப்பாக விளங்கியது. பாரிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில்களின் உற்பத்தியை உள்ளடக்கும் தொழிற்சாலைக் கைத்தொழில் துணைத்துறை 2003 இல் 4.6 சதவீதத்தால் வளர்ச்சி யடைந்தது. 2001 இல் 3.9 சதவீதத்தால் சுருக்கமடைந்த இத் துணைத்துறை, உள்நாட்டுச் சந்தையைச் சார்ந்த கைத்தொழில்களின் சாதகமான செயலாற்றம் கார ணமாக 2002 இல் 2.5 சதவீதத்தால் பகுதியளவில்

*சிறப்புக்குறிப்பு 6*

## பணிகள் துறையின் அதிகரித்துவரும் முக்கியத்துவம் அபிவிருத்திச் செயற்பாட்டின் இயல்பான பெறுபேறு

### அறிமுகம்

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பணிகள் துறையின் துரித வளர்ச்சியும் பங்கு அதிகரிப்பும் தலா வருமானத்துடன் இணைவாக இருப்பது அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் அபிவிருத்தி செயல்முறையில் அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும், மட்டுப்பாடான இயற்கைவள வாய்ப்பைக் கொண்ட இலங்கை போன்ற நாடுகளில் பொருளாதார நடவடிக்கைகளில் சேவைகள் துறையின் ஆதிக்கம் அதிகரித்து வருதலும், அதிகரித்துவரும் குடித்தொகை, குறைந்துவரும் வேளாண்மைக்கான நிலங்கள் எனும் நிலைப்பாட்டை எதிர்கொள்ளும் வகையில், பல வருமானம் ஈட்டும் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு மிக அவசியமான தோர் இயல்பான பெறுபேறாகும். இன்று இலங்கையில் பணிகள் துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரைவாசிக்கும் மேற்பட்ட பங்கை உருவாக்குவதுடன் முப்பது இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பையும் அதாவது வேலைசெய்வோருள் 43 சதவீதமானோர்க்கு வேலைவாய்ப்பை வழங்கியுள்ளது. இதனுடன் ஒப்பிடுமிடத்து, கைத்தொழில் மற்றும் வேளாண்மைத் துறைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முறையே 27 சதவீதத்தையும், 19 சதவீதத்தையும் கொண்டிருப்பதுடன் நாட்டில் 4 மில்லியன் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்குகின்றன.

### வரலாற்றுரீதியான முன்னேற்றம்

இலங்கை சுதந்திரத்தின்போது, அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஆரம்ப கட்டத்தில் வெளியீடு மற்றும் வேலைவாய்ப்பு போன்றவற்றுக்கு வேளாண்மையிலேயே பெரிதும் தங்கியிருந்தது. வேளாண்மைத்துறை முக்கியமாக தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பொருட்கள் எனும் மூன்று ஏற்றுமதிப் பயிர்களையும், நெல் உற்பத்தியையும் உள்ளடக்கி யிருந்தது. நெற்பயிர்ச்செய்கை கிராமப்புறங்களில் வாழ்ந்த மக்களில் கணிசமாளவு தொகையினரின் ஜீவனோபாயமாக இருந்தது. கைத்தொழில் துறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்மைத்துறை மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ அரைப்பங்கை வழங்கியதுடன் நாட்டின் தொழிற்படையில் 40 சதவீதத்திற்கும் கூடுதலானோருக்கு வேலைவாய்ப் பினையும் வழங்கியது. கைத்தொழில் துறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20சதவீதத்துக்கும் குறைவான பங்கைக் கொண்டிருந்ததுடன் இத்துறை பெரும்பாலும் முக்கிய வேளாண்மைப் பயிர்களைப் பதனிடுதல் மற்றும் சீமெந்து உடுபுடவைகள் மற்றும் சவர்க்காரம் போன்ற அடிப்படைத் தேவைப்பொருட்களை உற்பத்தி செய்யும் நடுத்தர அளவிலான கைத்தொழில் இயந்திர சாதனங்களைக் கொண்டதாகவும் அத்துடன் கிராமிய பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் கைப்பணிப் பொருட்கள், கயிறுகள், வலைகள், செங்கற்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் சிறிய அளவிலான பாரம்பரிய கைத்தொழில்களையும் உள்ளடக்கியிருந்தது. அத்தகைய காலகட்டத்திலும் கூட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பணிகள் துறை நடவடிக்கைகள் கிட்டத்தட்ட ஐந்தில் இரண்டு பங்கை வகித்ததுடன் நாட்டின் ஏற்றுமதிக்கான பெருந்தோட்டப் பயிர் வேளாண்மையின் விரிவாக்கத்துக்குச் சமாந்தர மாக வளர்ச்சியடைந்த வங்கி, காப்புறுதி, வர்த்தகம் மற்றும் போக்குவரத்து போன்ற சேவைகளை உள்ளடக்கியிருந்தன.

சுதந்திரத்தின் பின்னர் குறைந்த வருமானப் பொருளாதாரத்திலிருந்து நாடு வளர்கையில், குறைந்த பொருளாதார வள வாய்ப்புக்களுடன் அபிவிருத்தி யடையும் பொருளாதாரத்துக்கான அவசர தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் பொருளா தாரக் கட்டமைப்பு மாற்றத்துக்கு உட்பட்டது. வெளியீடு, வேலைவாய்ப்பு என்பவற்றைப் பொறுத்தவரை வேளாண்மைத்துறையின் பங்களிப்பு குறைவடைய, கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளின் பங்களிப்பு அதிகரித்ததுடன் பணிகள் துறையானது அதி விரை வான அதிகரிப்பைக் காட்டிநிற்கின்றது. 2003 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதியும் 43 சதவீதமான வேலைவாய்ப்பும் பணிகள் துறையினால் உருவாக்கப்பட்டிருந்த அதேவேளை கைத்தொழில் துறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நான்கில் ஒரு பங்குக்கு அதிகமாகவும் மொத்த வேலைவாய்ப்பில் 22 சதவீதத்தையும் கொண்டிருந்தது. அளவு அடிப்படையில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி இரண்டுமே அதிகரித்தபோதிலும் பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அவற்றின் உள்ளமைப்பு மாற்ற மடைந்தது. ஏற்றுமதிகளின் முக்கிய கூறாக இருந்த வேளாண்மை முதற் பண்டங்களுக்கும் இறக்குமதிகளின் முக்கிய கூறாக இருந்த நுகர்வுப் பொருட்களுக்கும் பதிலாக, ஏற்றுமதிகளில் கைத்தொழில் உற்பத்திகள் தொடர்பான பங்கும் இறக்குமதிகளில் இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் பங்கும் இடம்பிடித்துக் கொண்டன. இதற்கிடையில், தலா வருமானம் 1950 இன் 120 ஐ.அ.டொலர்களிலிருந்து

*சிறப்புக்குறிப்பு 6 (தொடர்ச்சி)*

அட்டவணை 1
இலங்கைப் பொருளாதாரக் கட்டமைப்பு

| காலம் | வேளாண்மை(%) | கைத்தொழில்(%) | பணிகள்(%) |
|---|---|---|---|
| 1951 - 1960 | 42 | 17 | 40 |
| 1961 - 1970 | 35 | 18 | 47 |
| 1971 - 1980 | 29 | 27 | 44 |
| 1981 - 1990 | 27 | 27 | 46 |
| 1991 - 2000 | 23 | 27 | 50 |
| 2001 - 2003 | 20 | 26 | 54 |

2003 இல் 947 ஐ.அ.டொலர்களாக வருடாந்தம் சராசரியாக 4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

சுதந்திரத்தின் பின்னர், ஆரம்ப காலகட்டத்தின் போதெல்லாம் வேளாண்மைத்துறை அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. பின்னைய காலகட்டத்தின்போது வர்த்தகம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு, தபால்சேவைகள், வங்கி மற்றும் ஏனைய நிதிசார் பணிகள் போன்ற பணிகள் துறை நடவடிக்கைகள் அரச ஏகபோகங்கட்கு உட்பட்டதுடன் செயற்றிறன் மற்றும் துறைசார் வளர்ச்சி வீதங்களில் வீழ்ச்சி ஏற்பட்டது. பணிகள் துறையானது செலாவணிக் கட்டுப்பாடுகள், தனியார் வியாபாரங்களின் தேசிய மயமாக்கல், உயர் வரிகள், சிக்கலான விலைக்கட்டண அமைப்பு போன்றவற்றால் மேலும் பாதிப்புக்குள்ளானது. பங்கீட்டு மற்றும் கட்டுப்பாட்டு முறைகளின் காரணமாக திட்டமிடுவோரின் முன்னுரிமைகளின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூகத் தெரிவுகளினால் நுகர்வோரின் தெரிவுகள் புறக்கணிக்கப்பட்டன. பணிகள் துறை வளர்ச்சியின் மீதான இத்தகைய மட்டுப்பாடுகள் மொத்த வளர்ச்சியையும் வருமான உருவாக்கத்தையும் குறைத்தது மட்டுமன்றி வேளாண்மை, கைத்தொழில் உற்பத்தித்துறைகளில் நுகர்வோருக்கும் உற்பத்தியாளர்களுக்கும் இடையே இருந்த தொடர்புகளையும் குறைத்தன.

மிக அண்மைக்காலமாக, பொருளாதார வளர்ச்சி மற்றும் அதன் பல்வகைத் தன்மை காரணமாக, உற்பத்திக்கும் நுகர்வுக்குமிடையே நவீனமான செயற்றிறன் வாய்ந்த மற்றும் இலகுவாக தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய துரிதமாக வளரும் வலுவான பணிகள் துறைக்கு பெரும் தேவை ஏற் பட்டுள்ளது. இக்குறைபாடுகள் இனங்காணப்பட்டு தாராளமயமாக்கப்பட்ட வர்த்தகம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு மற்றும் நிதிசார் பணிகள் மூலம் சேவைகள் நடவடிக்கைகளில் தனியார்துறையினரின் ஈடுபாட்டுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அரசுக்கென ஒதுக்கப்பட்ட துறைகளில் கூட உ+ம். தொலைத்தொடர்பு, போக்குவரத்து, தபால்சேவைகள், தனியார் துறை ஈடுபாட்டை அனுமதித்ததன் மூலம் தரமான சேவை வழங்குவதற்கான போட்டிகரமான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இச்சீர்திருத்தங்கள் யாவும் அதிகரித்துவரும் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் பணிகள் துறையை விரிவாக்குவதற்காகவும் பன்னாட்டு போக்குவரத்து, தொலைத்தொடர்பு மற்றும் நிதிச்சேவைகள் போன்ற பணிகள் துறையின் உபதுறை நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிப்பதற்காகவும் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றின் மூலம் இலங்கை இப் பிராந்தியத்தின் ஏனைய நாடுகளைக் காட்டிலும் ஒப்பீட்டளவிலும் போட்டியடிப்படையிலும் அதிகளவு நன்மைகளைப் பெறமுடியும். மேலும், இந்தியப் பொருளாதாரம் விரிவடைந்து அதிகம் வளர்ச்சிப் பாதையில் செல்கின்றமையால் அயல்நாடான இலங்கையும் பல நன்மைகளை அனுபவிக்கமுடியும்.

## பிராந்திய ஒப்பீடு

இலங்கையின் அனுபவம் இப்பிராந்தியத்தின் ஏனைய நாடுகளின் அனுபவங்களுடன் ஒப்பிடப்படக் கூடியதாகும். கொரியாவில் 1985 தொடக்கம் 2002 வரையான 17 வருட காலத்தின்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பணிகள் துறையின் பங்களிப்பு 47 சதவீதத்திலிருந்து 55 சதவீதமாக அதிகரிக்க வேளாண்மைத் துறையின் பங்களிப்பு 13 சதவீதத் திலிருந்து 4 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. பல்வேறு வகைப்பட்ட வளங்களைக் கொண்டதும் பாரிய உள்நாட்டுச் சந்தையைக் கொண்டதுமான இந்தியா கூட இதேபோக்கையே கொண்டிருக்கிறது. அதிகளவு இயற்கை வளங்களைக் கொண்ட தாய்லாந்து, மலேசியா என்பவை சற்று வித்தியாசமானவையாக இருப்பதனால் வேளாண்மைத் துறையை மாற்றீடு செய்யும் வகையில் கைத்தொழில், சேவைத்துறைகள் வளர்ச்சி அடைகின்றன. குறைந்தளவு இயற்கை வள வாய்ப்புக்கள் கொண்ட சிங்கப்பூரில் கடந்த 20 வருட காலமாக, பணிகள் துறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கைக் கொண்டிருக்கின்றது.

## முடிவுரை

பணிகள் துறையின் துரித வளர்ச்சியும், இலங்கைப் பொருளாதாரத்தில் தொடர்ச்சியாக அதிகரித்துவரும் அதன் பங்கும் நாட்டின் அபிவிருத்திச் செய்முறையில் அவதானிக்கப்பட்ட சாதாரண போக்கை ஒத்ததாக உள்ளன. பொருளாதார அபிவிருத்தியின் ஆரம்ப கட்டங்களில் வேளாண்மையும், நிர்மாணம் உள்ளிட்ட கைத்தொழிலும் உறுதியான பொருளா தாரக் கட்டமைப்புக்கான அடித்தளத்தை இட்டிருந்தன. இருப்பினும் பின்னைய கட்டங்களில் செல்வத்தை உருவாக்குவன என்ற வகையில் இத்துறைகளில் அடையப்பெறக் கூடியமையானது திறன்மிக்க பணிகள் துறையின் இருப்பிலேயே தங்கியிருக்க வேண்டியேற் பட்டது. இதற்கான காரணம் பணிகள்

**சிறப்புக்குறிப்பு 6 (தொடர்ச்சி)**

அட்டவணை 2
பொருளாதாரக் கட்டமைப்பின் பிராந்திய ஒப்பீடு

| நாடு | காலம் | வேளாண்மை(%) | கைத்தொழில்(%) | பணிகள்(%) |
|---|---|---|---|---|
| சிங்கப்பூர் | 1985 | 1.0 | 34.5 | 68.8 |
| | 1995 | 0.2 | 33.3 | 65.3 |
| | 2001 | 0.1 | 32.0 | 67.7 |
| | 2002 | 0.1 | 33.6 | 66.6 |
| கொரியா | 1985 | 12.6 | 41.0 | 46.5 |
| | 1995 | 6.2 | 43.2 | 50.6 |
| | 2001 | 4.3 | 42.0 | 53.7 |
| | 2002 | 4.0 | 40.9 | 55.1 |
| இந்தியா | 1985 | 33.0 | 28.2 | 38.8 |
| | 1995 | 28.4 | 27.9 | 43.7 |
| | 2001 | 25.0 | 25.9 | 49.2 |
| | 2002 | 22.7 | 26.6 | 50.7 |
| தாய்லாந்து | 1985 | 15.8 | 31.8 | 52.3 |
| | 1995 | 11.0 | 39.3 | 49.7 |
| | 2001 | 10.4 | 40.7 | 48.9 |
| | 2002 | 9.0 | 42.5 | 48.5 |
| இலங்கை | 1985 | 24.4 | 26.8 | 48.8 |
| | 1995 | 18.7 | 28.1 | 53.1 |
| | 2001 | 20.1 | 26.8 | 53.1 |
| | 2002 | 20.1 | 26.3 | 53.6 |
| மலேசியா | 1985 | வி.கி | வி.கி | வி.கி |
| | 1995 | 12.9 | 41.4 | 47.9 |
| | 2001 | 8.5 | 49.1 | 47.3 |
| | 2002 | 9.1 | 48.3 | 46.4 |

*முதன்மை பொருளாதாரக் குறிகாட்டிகள் 2003 ஆ.அ.வங்கி*

துறையானது பொருளாதாரத்தின் அடிப்படைச் செயற்பாடுகளான உற்பத்தி, விநியோகம், நுகர்வு என்பவற்றை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்துவதாக உள்ளதுடன் மக்களது தேர்வுக்கான வாய்ப்புக்களை விரிவாக்கல், கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் போதான செலவுகளைக் குறைத்தல், வசதிகளை வழங்குதல் போன்றவற்றின் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதனாலுமாகும். இதனால், ஒரு நாடு குறைந்த வருமானத்திலிருந்து அதிக வருமானத்தைப் பெறும் ஒன்றாக உருவாகுமிடத்து பொருளாதாரத்தில் பணிகள் துறையின் பங்கு அதிகரித்தலே பொதுவான போக்காகக் காணப்பட்டது. இத்துறை, இலங்கை இயற்கை வள வாய்ப்பைக் குறைவாகக் கொண்டதோர் நாடு என்ற வகையில் மிகவும் முக்கியமான துறையாகும். வினைத்திறன் கூடிய உற்பத்தி முறைமையானது உற்பத்தி அலகுகளுக்கு உள்ளீடுகளை வழங்குதல், என்பதில் நேரக்கட்டுப்பாடு, அளவு, தரம் எனும் மூன்று தேவைப்பாடுகளைப் வேண்டி நிற்கின்றது. உற்பத்தி வழிமுறையின் மறுபக்க முடிவில், நுகர்வும் உற்பத்திப் பொருட்கள் நுகர்வோருக்கு வழங்கப்படுவதிலும் அதே தேவைப்பாடுகளான நேரக்கட்டுப்பாடு, அளவு, தரம் என்பவற்றை வேண்டி நிற்கின்றது. பணிகள் துறையே இத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதுடன் உற்பத்தி, விநியோகம், நுகர்வு என்பவற்றை வினைத்திறமையுடன் நிறைவேற்றுவதற்கான வழியையும் வகுக்கிறது. இதனால் பணிகள் துறையின் வளர்ச்சியானது பொருளாதாரக் கட்டமைப்புப் பலவீனத்தை வளர்க்கும் ஒன்றாகக் கருதப்படாது பயனுள்ள அபிவிருத்தியாக நோக்கப்படவேண்டும்.

மீட்சியடைந்தது. 2003 இல் உள்நாட்டுச்சந்தை சார்ந்த கைத்தொழில்கள் நீடித்து நிலைத்திருந்த நுகர்வோர் நம்பகத்தன்மையை பிரதி பலிக்கும் வகையில் தொடர்ந்து வளர்ச்சியடைந்தது. பதனிடப்பட்ட உணவுகளின் உற்பத்தியிலான 7.3 சதவீத வளர்ச்சி குடிவகை உற்பத்தியிலான 12.0 சதவீத வளர்ச்சி என்பன காரணமாக உணவு, குடிவகை மற்றும் புகையிலை வகை 6.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. புகையிலைக் கைத்தொழிலிலான வீழ்ச்சி 3.5 சதவீதமாக விளங்கியது. சந்தையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள சட்டத்திற்கு புறம்பாக இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்டுகளுடன், புகையிலை மீதான உயர் வரிவீதங்களும் இக்கைத்தொழிலை பயமுறுத்தலுக்குள்ளாகியுள்ளன. மரமும் மர உற்பத்திகளும், பிளாத்திக்கும் பிவிசி உற்பத்திகளும், சீமெந்து, அடிப்படை உலோக உற்பத்திகள் மற்றும் உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் போன்ற உள்நாட்டுச்சந்தையை சார்ந்த கைத்தொழில்களும் முக்கியமாக கட்டடவாக்க செயற்பாடுகளிலிருந்தான அதிகரித்த கேள்வி காரணமாக சிறப்பாகச் செயலாற்றின. 2001 இல் பாரியளவில் சுருக்கமடைந்த ஏற்றுமதிச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்கள் 2002 இல் சிறிதளவால் மீட்சியடைந்து 2.6 சதவீதம் கொண்ட மிதமான வீதத்தில் வளர்ச்சியடைந்தன. 2002 மற்றும் 2003 இன் இணைந்த வளர்ச்சியானது 2001 இல் எதிர்கொள்ளப்பட்ட சுருக்கத்தை எதிரீடு செய்யப் போதுமானதாக இல்லை. ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் தொழிற்சாலைக் கைத்தொழிலின் 60 சதவீதத்திற்கு வகைகூறி, கூட்டப்பட்ட பெறுமதி, தொழில்வாய்ப்பு உருவாக்கம் மற்றும் வெளிநாட்டு செலாவணி உழைப்பு ஆகிய நியதிகளில் முக்கியமானதாக விளங்குவதால் இது கரிசனையைத் தோற்றுவிக்கிறது.

தொழிற்சாலைக் கைத்தொழிலில் மிகப்பெரிய கைத்தொழில் துணைத் துறையான புடவைகள், தைத்த ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் துணைத் துறை 2003 இல் 2.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. கடுமையான செலவுக்குறைப்பு மற்றும் மேம்பட்ட உண்மை பயன்தரு செலாவணிவீதம் என்பவற்றின் உதவியுடன் பேணப்பட்ட இலங்கை உற்பத்திகளின் போட்டித்தன்மை இவ்வளர்ச்சிக்கு உதவியது. எனினும், தைத்த ஆடைகள் கைத்தொழிலின் மீட்சியானது, ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் யப்பான் போன்ற முக்கிய

இறக்குமதி செய்யும் நாடுகளிலான மெதுவான மீட்சி, சில பன்னாட்டுச் சந்தைகளில் நிலவும் தொடர்ச்சியான பணச்சுருக்க அழுத்தங்கள் மற்றும் சீனா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் போன்ற குறைந்த உற்பத்திச் செலவைக் கொண்ட நாடுகளிலிருந்தான கடுமையான போட்டி என்பன காரணமாக எதிர்பார்க்கப்பட்டதை விட மெதுவாகவே காணப்பட்டது. ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களில், இறப்பர் உற்பத்திகள் 22 சதவீதம் கொண்ட அதியுயர் வளர்ச்சியைப் பதிவு செய்தன. இறப்பர் கையுறைகள் மற்றும் கைத்தொழில் ரயர்கள் போன்ற இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்களுக்கான கேள்வி, சீனாவிலிருந்தான கடுமையான போட்டிக்கு மத்தியிலும், உலகளாவிய சில்லறை விற்பனையாளர்களுடனான நெருங்கிய தொடர்புகள், தரத்திலான தொடர்ச்சியான மேம்பாடு மற்றும் முன்னேற்றகரமான சந்தைப்படுத்தல் உத்திகள் என்பவற்றின் விளைவால் அதிகரித்தது. இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் உள்நாட்டு ரயர் உற்பத்தியாளர்கள் 2003 இல் முதல் தடவையாக இந்தியச் சந்தைக்கு ஏற்றுமதி செய்தனர்.

சிறு கைத்தொழில்கள் 2002 இன் 2.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 6.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. நாட்டில் பரந்தளவில் காணப்படும் சிறு கைத்தொழிலான நெல் குற்றும் கைத்தொழில் சிறந்த நெல் விளைச்சல் காரணமாக 2003 இல் சிறப்பாகச் செயலாற்றியது. தயாரிக்கப்பட்ட உணவு வகைகளுக்கான அதிகரித்த கேள்வியின் காரணமாக வெதுப்பகக் கைத்தொழிலும் வளர்ச்சியடைந்தது. கட்டடவாக்க கைத்தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக மர ஆலைகள், பாறை மற்றும் உலோக உற்பத்திகள், செங்கற்கள், ஓடுகள், சீமெந்துக்கற்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் போன்ற சிறு கைத்தொழில்கள் நன்மையடைந்தன.

மின்வலு, நீர் மற்றும் வாயுத்துறை முன்னைய ஆண்டின் 0.7 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 2003 இல் 21.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வாண்டின் முதல் அரைப்பகுதியில் மின் உருவாக்கமானது, 2002 மே நடுப்பகுதி வரையில் அமுலாக்கப்பட்ட மின்வெட்டுக்களைக் கொண்ட கடந்த ஆண்டின் இதனையொத்த காலப்பகுதியின் தாழ்ந்த மட்டத்துடன் ஒப்பிடுகையில் 17.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில், மின் உருவாக்கம் 6.9 சதவீதத்தால் அதிகரித்து 11.7 சதவீதம் கொண்ட ஆண்டு அதிகரிப்பை விளைவித்தது. இவ்வாண்டில் மின்னிற்கான கேள்வி, முக்கியமாக கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறைகளிலான உயர் வளர்ச்சி காரணமாக 12.9 சதவீதத்தால் அதிகரித்தது. இலங்கையின் மின்சபை மற்றும் தனியார் வலு உற்பத்தியாளர்களால் உருவாக்கப்பட்ட நீர் மின்வலு 22.9 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், வெப்ப மின்வலு உருவாக்கம் 4.5 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வாண்டில், ஏ.ஈ.எஸ் (பிறைவேட்) லிமிட்டட்டால் நிர்மாணிக்கப்பட்ட 163 மெகாவாட் கொண்ட இணைந்த சுற்று வெப்ப மின்வலுப் பொறி மற்றும் 70 மெகாவாட் கொண்ட குக்குளே நீர் மின்வலுப்பொறி என்பன முறையே பெப்புருவரியிலும், செத்தெம்பரிலும் தொழில்படத் தொடங்கின. இதனால், குறிப்பாக இரண்டாம் காலாண்டில் குறைந்த செலவுடைய நீர் மின்வலுவின் அதிகரித்த உருவாக்கம் மற்றும் உயர் செலவில் வாடகைக்கமர்த்தப்பட்ட வெப்ப மின்வலு இரண்டாம் காலாண்டிலிருந்து குறைவாக பயன்படுத்தப்பட்டமை என்பன காரணமாக மின்வலுத் துணைத் துறையின் கூட்டப்பட்ட பெறுமதி 25.3 சதவீதம் அதிகரித்ததுடன் நிறுவப்பட்ட இயலளவு 10 சதவீதத்தினால் விரிவடைந்தது. 2002இன் 60.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில், மொத்த மின்வலுவில் 56.5 சதவீதம் வெப்ப மின்வலு மூலம் உருவாக்கப்பட்டது. இதேவேளை நீர் பகிர்ந்தளிப்பு முன்னைய ஆண்டின் 3.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1.4 சதவீதத்தால் அதிகரித்தது.

கட்டடவாக்கத்துறை 2003 இல் 5.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இத்துறை 2001 இல் பொருளாதார மந்தநிலையுடன் இடர்ப்பாடுகளை எதிர்கொண்டது. மிதமான வளர்ச்சியுடன் 2002 இல் பொருளாதாரம் பொதுவாக மீட்சியடைந்த போதிலும் இத்துறை, அப்போது நிலவிய தாழ்ந்த மட்ட முதலீடு மற்றும் பாரிய அளவு அரச செயற்றிட்டங்களின் பலவீனமான அமுலாக்கம் என்பன காரணமாக 0.8 சதவீதத்தால் சுருங்கியது. 2003 இல் வளர்ச்சியானது அரச முதலீடு மற்றும் மாடிவீட்டுத் தொகுதி மற்றும் கூட்டுரிமையைக் கொண்ட கட்டடங்கள், சிறப்பு அங்காடிகள் சில்லறை வர்த்தக நிலையங்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் தனிப்பட்ட வீடமைப்பு செயற்றிட்டங்கள் போன்ற சிறிய மற்றும் நடுத்தர அளவு தனியார் துறை நடவடிக்கைகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டது. நாட்டின் தெற்கு மற்றும் வடக்குப் பகுதிகளிலான பாரிய அளவு வீதி நிர்மாணச் செயற்றிட்டங்கள் கட்டடவாக்கத் துறையின் வளர்ச்சிச் செயலாற்றத்துக்குப் பங்களிப்புச் செய்தன. கட்டடவாக்கத் துறையின் வளர்ச்சியானது உயர் உற்பத்தி, இறக்குமதிகள் மற்றும் சீமெந்தினதும் ஏனைய கட்டடவாக்கப் பொருட்களினதும் விற்பனைகள் என்பவற்றுடன் ஒத்துச்செல்வதாக இருக்கின்றது.

### வேளாண்மைத்துறை

முன்னைய ஆண்டில் 2.5 சதவீதத்தால் விரிவடைந்த வேளாண்மைத்துறை, 2003 இல் அமைப்பு ரீதியிலான நெகிழ்ச்சியற்ற தன்மை மற்றும் கலப்பான

வானிலை நிலைமைகளின்கீழ் 1.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. வேளாண்மைத்துறையின் சார்புரீதியான முக்கியத்துவம் 2002 இன் 19.8 சதவீதத்திலிருந்து 2003 இல் 19.0 சதவீதத்திற்கு தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. 2003 இல் மரக்கறிகள், நெல், தெங்கு, இறப்பர் மற்றும் சிறுஏற்றுமதிப் பயிர்கள் போன்ற முக்கியமான பெரும்பாலான பயிர்களினது உற்பத்தி மேம்பட்டிருக்கையில் தேயிலை, துணை உணவுப்பயிர்கள் மற்றும் புகையிலை உற்பத்தி திருப்திகரமற்றதாக விளங்கியது. 2003 இன் நடுப்பகுதியில் நாட்டின் சில பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளநிலைமை பெரும்பாலான வேளாண்மைப் பொருட்களின் வெளியீட்டை மோசமாகப் பாதித்தது.

பெருந்தோட்ட வேளாண்மையில் தேயிலை உற்பத்தி 303.2 மில்லியன் கிலோகிறாம்களுக்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. இது 2.2 சதவீதங் கொண்ட வீழ்ச்சியாகும். 2002 வரை தொடர்ச்சியாக ஏழாவது ஆண்டாகவும் தேயிலை உற்பத்தி சாதனை படைத்ததுடன், அவ்வாண்டில் அதிகூடிய அளவான 310 மில்லியன் கிலோகிறாம்களாக விளங்கியது. 2003 இன் வீழ்ச்சிக்கு பங்களிப்புச்செய்த முக்கிய காரணியாக ஆண்டிறுதியில் நிலவிய வரட்சியான வானிலை நிலைமைகள் காரணமாக உயர் நிலத் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட 6.2 சதவீத வீழ்ச்சி விளங்குகின்றது. தாழ்நிலப் பகுதியிலான உற்பத்தி ஆண்டின் நடுப்பகுதியில் பெய்த மழையாலும், அதனையடுத்து ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவாலும் பாதிக்கப்பட்டு தாழ்நிலத் தேயிலை உற்பத்தியில் சிறுவீழ்ச்சியை விளைவித்தது. இவ்வாண்டின் முதல் அரைப்பகுதியில் ஈராக் யுத்தத்தின் காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்ட விலைகள் பின்னரைப் பகுதியில் கவர்ச்சிகரமானதாக விளங்கின. பொதுவாக 2003 இல் தேயிலை விலைகள் சராசரியாக 0.3 சதவீதத்தால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தன. 2003 இல் தேயிலை ஏற்றுமதிகள் முன்னெப்பொழுதும் இல்லாத உச்ச மட்டமான 298.3 மில்லியன் கிலோகிறாம்களாக விளங்கி 2002 இனை விட 6.5 மில்லியன் கிலோகிறாம் கொண்ட அதிகரிப்பை பதிவு செய்தன.

2003 இல் இறப்பர் உற்பத்தி, 51 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க விலை அதிகரிப்புக்கு மத்தியிலும், 1.7 சதவீதத்தால் சிறிதளவால் மட்டுமே அதிகரித்தது. எனினும் 2003 செத்தெம்பர் வரை உற்பத்தி அதிகரிக்கும் போக்கைக் கொண்டிருந்தது. பன்னாட்டு விலைகளிலான மீட்சிக்கு கிழக்காசியாவிலுள்ள முக்கிய இறப்பர் உற்பத்தியாளர்களால் உற்பத்தி குறைக்கப்பட்டமை மற்றும் மேம்பட்ட உலகப் பொருளாதார வளர்ச்சிப் பின்னணியில் அதிகரித்த கேள்வி என்பன காரணமாக அமைந்தன. மொத்த உற்பத்தியில் ஏறத்தாழ 60 சதவீதத்தை ஈர்த்துக்கொள்ளும் உள்நாட்டு நுகர்வு, இறப்பர் தயாரிப்புக் கைத்தொழில்களின் விரிவாக்கத்துடன் விரைந்த வேகத்தில் வளர்ச்சியடைந்தது.

2001 இன் முதலாம் காலாண்டிலிருந்து தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்த தெங்கு உற்பத்தி 2003 இல் 7.1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. தெங்கு உற்பத்தியானது 2002 இன் 2,392 மில்லியன் காய்களுடன் ஒப்பிடுகையில், 2002 இல் நிலவிய சாதகமான காலநிலையின் காலந்தாழ்த்திய தாக்கத்தின் விளைவாக 2,562 மில்லியன் காய்களாக விளங்கியது. இவ்வளர்ச்சி அண்மிய காலத்திலும் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பானது, 11.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த ஆண்டுச் சராசரி உற்பத்தியாளர் விலைகளில் பிரதிபலிக்கப்பட்டது. மேலும், ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் விலைகளிலான வீழ்ச்சி 26 சதவீதமாக விளங்கியது.

உள்நாட்டு வேளாண்மையில், 2003 இல் நெல் உற்பத்தி 3.067 மில்லியன் மெற்றிக் தொன்களாக விளங்கி முன்னைய ஆண்டை விட 7.2 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. பெரும்போகம் மற்றும் சிறுபோகம் ஆகிய இரண்டிலுமான நெல் உற்பத்தி முன்னெப்பொழுதுமில்லாத சாதனை மட்டமாக இருந்தது. 2002/2003 பெரும்போகத்தில் நெல் உற் பத்தி 1.895 மில்லியன் மெற்றிக் தொன்களாக விளங்கி, முன்னைய பெரும்போகத்தை பார்க்கிலும் 6.8 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. சிறுபோக உற்பத்தி 7.9 சதவீதத்தால் அதிகரித்து 1.172 மில்லியன் மெற்றிக் தொன் கொண்ட உற்பத்தியைப் பதிவு செய்தது. இவ்வாண்டிற்கான பெறுமதி கூட்டல் 7.4 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முன்னெடுப்பானது உள்நாட்டுக் குழப்பத்தால் முன்பு கைவிடப்பட்டிருந்த வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நெற்செய்கையை இயலச் செய்தது. அத்துடன் சாதகமான வானிலை நிலைமைகளும் உற்பத்தியின் உயர் மட்டத்திற்கு உதவின. பயிர் செய்யப்பட்ட பரப்பளவு 15.2 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், வடக்கு மற்றும் கிழக்கிலான பரப்பளவு 17.8 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் எக்டேயர் ஒன்றுக்கான விளைச்சல் வளம் குறைந்த நிலங்களிலான பயிர்ச்செய்கை காரணமாக வீழச்சியடைந்தது. நெல் விலைகள் 8.6 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றமை மற்றும் அளவு நியதிகளில் அரிசி இறக்குமதிகள் 64 சதவீத வீழ்ச்சியை கொண்டிருந்தமை என்பன இப்பயிர்ச்செய்கை ஆண்டில் உயர்வடைந்த உற்பத்தி அளவுகளை தெளிவாக பிரதிபலிக்கின்றன.

மரக்கறிகள், துணை உணவுப்பயிர்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள், விலங்கு வளர்ப்பு, கரும்பு, புகையிலை மற்றும் பழங்களை உள்ளடக்கியுள்ள ஏனைய வேளாண்மைத் துணைத் துறையின் கூட்டப்பட்ட பெறுமதி 2003 இல் 1.8 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வகையினுள் மரக்கறி உற்பத்தி 4.0 சதவீதத்தால்

**அட்டவணை 2.2**
**ஏனைய வேளாண்மைத் துணைத்துறைகளின் உள்ளடக்கம்**

| துறை | பெறுமதி கூட்டப்பட்ட (1996) நிலையான விலையில் (ரூ.மில்.) | | |
|---|---|---|---|
| | 2001 | 2002அ | 2003ஆ |
| **மொத்தம்** | **76,205** | **78,397** | **79,797** |
| காய்கறிகள் | 35,166 | 34,155 | 35,761 |
| துணை உணவுப் பயிர் களுக்கான உதவுதொகை (இ) | 15,312 | 17,126 | 16,216 |
| சிறு ஏற்றுமதிப் பயிர்கள் (ஈ) | 6,297 | 7,116 | 7,443 |
| கரும்பு | 1,048 | 1,058 | 1,217 |
| புகையிலை | 1,297 | 1,487 | 1,435 |
| விலங்கு வளர்ப்பு (உ) | 7,377 | 7,303 | 7,431 |
| ஏனையவை | 9,708 | 10,152 | 10,294 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.
(இ) துணை உணவுப் பயிர்கள், உருளைக்கிழங்கு, மிளகாய், சின்னவெங்காயம், பெரியவெங்காயம், பயறு, தட்டைப்பயறு மற்றும் குரக்கன் என்பனவற்றை உள்ளடக்கும்.
(ஈ) சிறு ஏற்றுமதிப் பயிர்கள், கோப்பி, மிளகு, கறுவா, கராம்பு, மரமுந்திரிகை மற்றும் வெற்றிலை என்பவற்றை உள்ளடக்கும்.
(உ) விலங்கு வளர்ப்பு, பால், முட்டைகள், கோழி வளர்ப்பு மற்றும் ஏனைய இறைச்சி வகையை உள்ளடக்கும்.

அதிகரித்தது. பெரும்பாலும் அனைத்து தாழ்நிலக் காய்கறிகளினது உற்பத்தி அதிகரித்திருக்கையில், பெரும்பாலான மலைநாட்டு மரக்கறிகளின் உற்பத்தி மட்டங்கள் வீழ்ச்சியடைந்தன. துணை உணவுப் பயிர்கள் வகை 4.3 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வீழ்ச்சியானது பெரும்போகத்திலான 1.2 சதவீத வளர்ச்சியினதும், சிறுபோகத்திலான 10.5 சதவீத வீழ்ச்சியினதும் இணைந்த விளைவால் ஏற்பட்டதாகும். உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியே துணை உணவுப் பயிர்களின் உற்பத்தியிலேற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக விளங்கியது.

சிறுஏற்றுமதிப் பயிர்கள் வகையின் உற்பத்தி 4.6 சதவீதத்தால் அதிகரித்தது. கோப்பி, சாதிக்காயும் சாதிப்பத்திரியும், ஏலம் மற்றும் வெற்றிலையின் ஏற்றுமதி அளவுகள் வளர்ச்சியடைந்தன. எனினும் ஏற்றுமதி வருவாய்கள் 2002 இல் பதிவு செய்யப்பட்ட 52 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 22.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. புகையிலை உற்பத்தி முக்கியமாக முன்பு குறிப்பிட்டவாறு புகையிலைக் கைத்தொழிலில் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக 3.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. விலங்கு வளர்ப்பு துணைத்துறை இவ்வாண்டில் 1.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2003 இல் கோழி இறைச்சி உற்பத்தி 2002 இன் 4.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதேவேளை, பால் உற்பத்தியின் கூட்டப்பட்ட பெறுமதி, அதிகரித்த உள்ளீட்டுச் செலவின் குறிப்பாக, மாட்டுத்தீனின் விலையின் மோசமான விளைவுகளுக்கு மத்தியிலும் 1.2 சதவீதத்தால் அதிகரித்தது.

முதன்மைத்தரவு மூலங்களின்படி, இவ்வாண்டில் மீன் உற்பத்தி 5.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சியானது கடற்றுறை உற்பத்தியின் 6.8 சதவீத வீழ்ச்சியினதும், நன்னீர் மீன் உற்பத்தியின் 7.6 சதவீத அதிகரிப்பினதும் இணைந்த விளைவாக விளங்கி, அத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதியில் 6.9 சதவீத வீழ்ச்சிக்கு இட்டுச்சென்றது. கடல் மீன் உற்பத்தியின் வீழ்ச்சிக்கு பல நாள் படகுகள் தொகுதியிலேற்பட்ட வீழ்ச்சி, அத்துடன் 2003 மே மற்றும் யூன் மாதங்களில் தெற்கு மற்றும் வடமேற்குக் கரைப்பகுதிகளில் நிலவிய மோசமான வானிலை காரணமாக மீன்பிடிக்கும் நாட்களில் ஏற்பட்ட இழப்பு என்பன காரணமாயமைந்தன. வட பிராந்திய கடல் எல்லைப் பகுதியிலான மீன்பிடியும் சட்டவிரோதமாக ஊடுருவி மீன்பிடிப்பவர்களால் பாதிக்கப்பட்டது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி, மீன் விலைகளில் சராசரியாக ஏற்பட்ட 7.4 சதவீத அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கிலான உள்நாட்டு வேளாண்மை உற்பத்தி போர் நிறுத்தத்திற்கு சாதகமாக பதிலிறுத்திருக்கையில் அத்தகைய சாதகமான அபிவிருத்திகள் 2 ஆண்டுகளின் பின்னரும் கூட மீன்பிடித்துறையில் இன்னமும் அடையப்படாதிருக்கிறது. இதற்கான காரணமாக இப்பகுதிகளிலிருந்து மீனை ஏற்றிச் செல்வதற்கான குளிரூட்டல் வசதிகளும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பது அமைகின்றது.

## 2.3 செலவினம்

உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட திரண்ட கேள்வியானது மொத்த உள்நாட்டுச் செலவினத்தின் மூலம் அளவிடப்படுகின்றது. இது பொருளாதாரத்தின் தனியார் மற்றும் அரச துறைகளின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினத்தின் மொத்தத் தொகையாகும். 2003 இல் நடைமுறைச்சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவு அல்லது மொத்த உள்நாட்டுக் கேள்வி ரூ.1,876 பில்லியனென மதிப்பிடப்பட்டதுடன் இது 2002 இனை விட 10.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றை பிரதிபலித்தது. ஒப்பிடுகையில், 2002 இல் பெயரளவு நியதிகளில் உள்நாட்டுக் கேள்வி 13.1 சதவீதத்தால் அதிகரித்தது. 2002 இல் உள்நாட்டுக் கேள்வியிலான உண்மை அதிகரிப்பு 6.6 சதவீதமாக இருக்கையில், 2003 இல் தொடர்பான அதிகரிப்பு 8.4 சதவீதமாக இருந்தது. 2003 இன் உயர்ந்த அதிகரிப்பானது தூண்டுதல் அளிக்கக்கூடிய பேரண்டப் பொருளாதாரச் சூழலில் உயர்வடைந்த நுகர்வோர் மற்றும் முதலீட்டாளர் நம்பகத் தன்மையையும் 2003 இல் நிலவிய குறைந்த பணவீக்கத்தினையும் பிரதிபலிக்கிறது. மொத்தச் செலவினத்தில் நுகர்வுச் செலவு 78 சதவீதத்திற்கு வகைகூறி 2002 இல் நிலவிய அதே மட்டத்தில்

காணப்பட்டது. மொத்த உள்நாட்டுச் செலவினம் மற்றும் தேறிய இறக்குமதிகள் என்பனவற்றின் கூட்டுத் தொகையான சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.1,760 பில்லியனாக விளங்கி, 11.2 சதவீத அதிகரிப்பொன்றைக் கொண்டிருந்தது.

நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வுச் செலவினம் ரூ.1,483 பில்லியனாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டினைக் காட்டிலும் 9.6 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இது சராசரி விலை மட்டத்திலான 3.2 சதவீத அதிகரிப்பையும், உண்மை நுகர்வில் 6.1 சதவீத அதிகரிப்பையும் பிரதிபலிக்கின்றது. மொத்த நுகர்வில், தனியார் நுகர்வுச் செலவினம் 10.7 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், 2002 இல் 3.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த அரச நுகர்வு 2003 இல் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, மொத்த நுகர்வுச் செலவினத்தில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு முன்னைய ஆண்டின் 90 சதவீதத்திலிருந்து 91 சதவீதத்திற்கு அதிகரித்தது. தனியார் துறையால் வழிநடத்தப்படும் பொருளாதார வளர்ச்சிக் கொள்கையுடன் இசைந்துசெல்லும் வகையில் வீழ்ச்சியடைந்து செல்லும் அரசதுறை பொருளாதார செயற்பாட்டினைப் பின்தொடர்ந்து அரச நுகர்வு படிப்படியாக சுருக்கமடைந்து செல்வது அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டது. தனியார் நுகர்வுச் செலவினத்தில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களினது செலவினம் 9.2 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகள் மீதான செலவினம் உள்நாட்டுக் கேள்வியிலான கணிசமான அதிகரிப்பு காரணமாக 14.1 சதவீதத்தால் அதிகரித்தது.

முன்னைய ஆண்டுகளைப் போலவே தனியார் நுகர்வுச் செலவினத்தில் உணவு மற்றும் வெறியம் அல்லாக் குடிபானங்களுக்கான செலவு அதிகரித்துக் காணப்பட்டது. எனினும், இவ்வகையின் சார்புரீதியிலான முக்கியத்துவம் 2002 இன் 37 சதவீதத்திலிருந்து 2003 இல் 34 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வகையின் குறைவடைந்து செல்லும் முக்கியத்துவம் 1996 இல் இத் தரவுத் தொடர்கள் தொடங்கப்பட்டதிலிருந்து அவதானிக்கப்பட்டது. வாழ்க்கைத்தரம் மற்றும் வாழ்க்கை நிலையிலான மேம்பாட்டுடன் உணவு போன்ற அடிப்படைத் தேவைகள் மீதான செலவினத்தின் சார்பான பங்கு ஏனைய துறைகளுக்கு பன்முகப் படுத்தப்பட்டது. 2003 இல் உணவு மற்றும் வெறியம் அல்லாக் குடிபானங்கள் மீதான செலவினம் 1.7 சதவீதத் தால் வளர்ச்சியடைந்து அனைத்து வகைகளிலுமான ஆகக்குறைந்த வளர்ச்சியைக் கொண்டிருந்தது. 2003 இல்

**அட்டவணை 2.3**
**திரண்ட கேள்வி**

(ரூ.மில்லியன்)

| விடயம் | நடைமுறைச் சந்தைவிலைகளில் | | | நிலையான விலைகள்(1996) விலைகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2001 | 2002(அ) | 2003(ஆ) | 2001 | 2002(அ) | 2003(ஆ) |
| **அ. உள்நாட்டுக் கேள்வி** | | | | | | |
| நுகர்வு | 1,185,482 | 1,353,428 | 1,483,164 | 826,552 | 880,489 | 934,555 |
| (% மாற்றம்) | 14.2 | 14.2 | 9.6 | 0.2 | 6.5 | 6.1 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 309,684 | 337,782 | 392,940 | 214,731 | 229,094 | 267,945 |
| (% மாற்றம்) | -12.2 | 9.1 | 16.3 | -17.5 | 6.7 | 17.0 |
| **மொத்த உள்நாட்டுக் கேள்வி** | **1,495,166** | **1,691,210** | **1,876,104** | **1,041,283** | **1,109,583** | **1,202,500** |
| **(% மாற்றம்)** | **7.5** | **13.1** | **10.9** | **-4.0** | **6.6** | **8.4** |
| **ஆ. வெளிநாட்டுக் கேள்வி** | | | | | | |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 525,398 | 570,995 | 629,696 | 352,064 | 374,223 | 392,148 |
| (% மாற்றம்) | 7.1 | 8.7 | 10.3 | -5.3 | 6.3 | 4.8 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் | 613,167 | 679,550 | 745,520 | 461,917 | 515,448 | 569,121 |
| (% மாற்றம்) | -1.7 | 10.8 | 9.7 | -9.5 | 11.6 | 10.4 |
| தேறிய வெளிநாட்டுக் கேள்வி | (87,768) | (108,555) | (115,824) | (109,853) | (141,225) | (176,973) |
| **இ. மொத்தக் கேள்வி** | **1,407,398** | **1,582,655** | **1,760,280** | **931,430** | **968,358** | **1,025,527** |
| **(% மாற்றம்)** | **11.9** | **12.5** | **11.2** | **-1.5** | **4.0** | **5.9** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டுள்ளது
(ஆ) தற்காலிகமானவை
(இ) எஞ்சியுள்ள விடயங்களை 2001ஆம் ஆண்டிற்கான காரணியல்லா பணிகளாகக் கருதப்பட்டமையினால் வானூர்திகளின் கொள்வனவுக்காக பெறப்பட்ட ஐ.அ.டொலர் 292.8 மில்லியன் கடன்கள் மீதான மீள்கொள்வனவு வானூர்திகள் தாக்கப்பட்டதிற்கெதிராக காப்புறுதிக் கொடுப்பனவுகளிலிருந்தான பெறுகைகள் சென்மதி நிலுவை பயணிகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரிசி, சீனி, தெங்கு, தேங்காய் எண்ணெய் மற்றும் சில துணை உணவுப்பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளிலான வீழ்ச்சியானது இம்மெதுவான வளர்ச்சிக்கு இட்டுச்சென்றது. புடவை மீதான செலவினத்தின் பங்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்து 6 சதவீதத்திற்கும் கீழாக காணப்பட்டது. அதிகூடிய வளர்ச்சியான 48 சதவீதம் போக்குவரத்துக்கானதாகப் பதியப்பட்டுள்ளது. 2003 இல் இவ்வதிகரிப்பானது உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மற்றும் புதிய பதிவுகளின் அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டது. விலைகளிலான அதிகரிப்புக்கு மத்தியிலும் போக்குவரத்துக்கான எரிபொருளின் அதிகரித்த நுகர்வும் போக்குவரத்து மீதான உயர்ந்த செலவுக்குப் பங்களிப்புச் செய்தது. 2003 இல் தொலைத்தொடர்பூட்டல் மீதான செலவினமும் 33 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்கு நாடு பூராவும் தொலைத்தொடர்பூட்டல் வசதிகள் அதிகரித்தளவில் கிடைக்கத்தக்கதாக இருந்தமை மற்றும் தொலைத்தொடர்பூட்டல் வசதிகளின் அதிகரித்திருந்த பாவனை என்பன உதவியளித்தன. எனினும், தொடர்பூட்டலின் பங்கு மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தில் இன்னமும் 2.2 சதவீதமாகவே தொடர்ந்து விளங்குகிறது. இத்துடன் வீடமைப்பும் பொதுவசதியும், நலம் மற்றும் பல்வகைப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் என்பன மீதான செலவினமும் குறிப்பிடத்தக்க வீதங்களில் அதிகரித்தன. இவ்வனைத்து வகைகளும் உண்மை நியதிகளில் நுகர்வில் அதிகரிப்பை எடுத்துக்காட்டின. தனியார் நுகர்வுச் செலவினத்தின் நோக்க அடிப்படையிலான பகுப்பு (பின்னிணைப்பு அட்டவணை 7) 2003 இல் பொருளாதார வளர்ச்சி பெரும்பாலும் பணிகள் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டமைந்திருந்ததனை வெளிப்படுத்தியது. பணிகளுக்கான கேள்வியுடன் ஒப்பிடுகையில், பொருட்களுக்கான கேள்வி சார்புரீதியில் மெதுவான வேகத்தில் அதிகரித்து பணிகள் செயற்பாடுகள் விரைந்த வீதத்தில் வளர்ச்சியடைவதை இயலச்செய்ததனை புள்ளிவிபரங்கள் வெளிப்படுத்துகின்றன. அடிப்படைத் தேவைகளை ஈடுசெய்வதற்கான பொருட்கள் மீதான நுகர்வோர் செலவினத்தின் சார்புரீதியிலான பங்கானது, நுகர்வோரின் விருப்பத் தெரிவான பணிகளுக்குச் சாதகமாக வீழ்ச்சியடைந்து செல்வதனைத் தொடர்ந்து இலங்கை குறைந்த வருமானமுடைய நிலைமைகளிலிருந்து தலைக்குரிய வருமானத்திலான அதிகரிப்பு ஒன்றுக்கு நகர்ந்து செல்வதனை உறுதிப்படுத்த கிடைக்கத்தக்க தாகவுள்ள ஏனைய சான்றுகளுக்கு இவ் அவதானிப்புக்கள் உதவியளிக்கின்றன.

மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம் அல்லது நடைமுறைச்சந்தை விலைகளிலான முதலீட்டுச் செலவினம், ரூ.393 பில்லியனாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டினைப் பார்க்கிலும் 16.3 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. முன்னைய ஆண்டில் தொடர்பான அதிகரிப்பு 9.1 சதவீதமாகும். உண்மை நியதிகளில், 2003 இல் மூலதன உருவாக்கம் 17.0 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், முன்னைய ஆண்டில் தொடர்பான வளர்ச்சி 6.7 சதவீதமாக காணப்பட்டது. 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் முதலீட்டுச் செலவினம் 2000 இனை விட குறைவானதாக காணப்பட்டது. இம்மட்டம் 2003 இல் விஞ்சப்பட்டது. போர்நிறுத்தமும் சமாதான முயற்சியும் தொடர்ந்தமை, பொருளாதார நடவடிக்கை மற்றும் பொருளாதார வளர்ச்சியிலான உறுதியான விரிவாக்கம், அரசின் பொருளாதார நிகழ்ச்சித்திட்டத்துக்கான கொடையாளிகளின் ஆதரவு குறைந்த வட்டி வீதங்கள் மற்றும் முன்னேற்றமடைந்த பேரண்டப் பொருளாதார முகாமைத்துவம் என்பன முதலீட்டின் அதிகரிப்புக்கு இட்டுச்சென்ற முக்கிய காரணிகளாக விளங்கின.

முதலீட்டுச் செலவினத்திலான மீட்சியானது தனியார் துறையால் வழிப்படுத்தப்பட்டது. மொத்த முதலீட்டு விகிதம் 22.0 சதவீதத்திலிருந்து 2002 இல் 21.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தபோதிலும், தனியார் முதலீட்டு விகிதம் (தனியர்துறை முதலீடு/ மொ.உ. உற்பத்தி) 16.2 சதவீதத்திலிருந்து 2002 இல் 16.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. இவ்விகிதம் 2003 இல் 17.0 சதவீதத்திற்கு மேலும் மேம்பட்டது. தனியார்துறை முதலீடு முக்கியமாக வலு உருவாக்கம், தொலைத் தொடர்பூட்டல், போக்குவரத்து மற்றும் சில்லறை வர்த்தகத்தில் செறிந்து காணப்பட்டது. துறைரீதியில், போக்குவரத்துக் கருவியிலான முதலீடு அதிகூடிய அதிகரிப்பான 38 சதவீதத்தைப் பதிவு செய்தது. கட்டடங்கள் மற்றும் ஏனைய கட்டடவாக்கத்திலான முதலீடு 14 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், பொறி மற்றும் இயந்திரங்கள் மீதான முதலீடு 10 சதவீதத்தால் அதிகரித்தது. இம்முதலீடுகளில் பெரும்பாலானவை இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டதால் இதன் தாக்கம் 2004 இன் உற்பத்தியிலும் பிரதிபலிக்கப்படும்.

அரச முதலீடு ரூ.40.7 பில்லியனாக மதிப்பிடப்பட்டு 2002 இன் மட்டத்தை விட 28 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. 2002 இல் அரச முதலீடு 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2003 இல் அரச முதலீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பானது அரசின் நடைமுறைச் செலவினத்தின் குறைப்புடன் இணைந்திருந்தது. அரச முதலீடு முக்கியமாக கொழும்பு-மாத்தறை பெருந்தெருக்கள் செயற்றிட்டம் உள்ளடங்கலான வீதி அபிவிருத்தி, பிராந்திய அபிவிருத்தி மற்றும் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் புத்தாக்க வேலைகள் என்பவற்றில் கவனஞ் செலுத்தியது.

அட்டவணை 2.4
நிலையான (1996) விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும்

| விடயம் | பெறுமதி (ரூ. மில்லியன்) | | | சதவீதப் பங்கு | | | சதவீத வளர்ச்சி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2001 | 2002(அ) | 2003(ஆ) | 2001 | 2002(அ) | 2003(ஆ) | 2002(அ) | 2003(ஆ) |
| 1. மொத்த மூலவளங்கள் | 1,393,347 | 1,483,806 | 1,594,648 | 100 | 100 | 100 | 6.5 | 7.5 |
| சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி | 931,430 | 968,358 | 1,025,527 | 67 | 65 | 64 | 4.0 | 5.9 |
| பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளினது இறக்குமதிகள்(இ) | 461,917 | 515,448 | 569,121 | 33 | 35 | 36 | 11.6 | 10.4 |
| 2. பயன்பாடு | 1,393,347 | 1,483,806 | 1,594,648 | 100 | 100 | 100 | 6.5 | 7.5 |
| நுகர்வு | 826,552 | 880,489 | 934,555 | 59 | 59 | 59 | 6.5 | 6.1 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 214,702 | 226,037 | 266,428 | 15 | 15 | 17 | 5.3 | 17.9 |
| அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார்துறை | 185,490 | 204,490 | 234,980 | 13 | 14 | 15 | 10.2 | 14.9 |
| அரசு | 29,212 | 21,547 | 31,448 | 2 | 1 | 2 | -26.2 | 46.0 |
| இருப்புக்களின் மாற்றம் | 29 | 3,057 | 1,517 | 0 | 0 | 0 | 10441.4 | -50.4 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 352,064 | 374,223 | 392,148 | 25 | 25 | 25 | 6.3 | 4.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.
(இ) எஞ்சியுள்ள விடயங்கள் 2001ஆம் ஆண்டிற்கான காரணியல்லாப் பணிகளாக கருதப்படாமையினால் வானூர்திகளின் கொள்வனவிற்காகப் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 292.8 மில்லியன் கடன்கள் மீதான மீள்கொள்வனவு, வானூர்திகள் தாக்கப்பட்டதற்கெதிரான காப்புறுதிக் கொடுப்பனவுகளிலிருந்தான பெறுகைகள் சென்மதி நிலுவைப் பணிகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## 2.4 மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்

நாடொன்றில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மொத்த மூலவளங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் (உள்நாட்டு மூலவளங்கள்) பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் இறக்குமதிகள் (வெளிநாட்டு மூலவளங்கள்) என்பவற்றை உள்ளடக்குகிறது. இது நடைமுறைச்சந்தை விலைகளில், ரூ.2,506 பில்லியனாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டைப்பார்க்கிலும் 10.8 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. இவ்வதிகரிப்பானது உள்நாட்டு மூலவளங்களிலான ரூ.178 பில்லியன் (11.2 சதவீதம்) கொண்ட அதிகரிப்பாலும், வெளிநாட்டு மூலவளங்களிலான ரூ.66 பில்லியன் (9.7 சதவீதம்) கொண்ட அதிகரிப்பாலும் தோற்றுவிக்கப்பட்டது. உண்மை நியதிகளில், மூலவளங்களின் கிடைப்பனவு 7.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இது உள்நாட்டு மூலவளங்களின் 5.9 சதவீத உண்மை வளர்ச்சியினையும் பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகள் இறக்குமதிகளின் 10.4 சதவீத உண்மை வளர்ச்சியையும் உள்ளடக்குகிறது. 2002 இல் தொடர்பான வளர்ச்சி வீதங்கள் முறையே 4.0 சதவீதமாகவும், 11.6 சதவீதமாகவும் விளங்கின.

மூலவளங்களின் பயன்பாட்டைப் பொறுத்தமட்டில் நுகர்வு உண்மை நியதிகளில் 6.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டில் தொடர்பான வளர்ச்சி 6.5 சதவீதமாகக் காணப்பட்டது. நிலையான மூலதன உருவாக்கத்துக்கான மூலவளங்களின் பயன்பாடு 17.9 சதவீதத்தாலும், பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதிகள் 4.8 சதவீதத்தாலும் அதிகரித்தன. 2002 இல் வளர்ச்சி வீதங்கள் முறையே 5.3 சதவீதமாகவும், 6.3 சதவீதமாகவும் விளங்கின. கிடைக்கத்தக்கதாகவுள்ள மொத்த மூலவளங்களில் 58.6 சதவீதம் நுகர்வால் ஈர்த்துக் கொள்ளப்பட்டதுடன், இது 2002 இனை விட குறைவடைந்து காணப்பட்டது. இது 2002 இன் 15.2 சதவீதத்திலிருந்து, 2003 இல் 16.7 சதவீதத்திற்கு அதிகரித்த மூலதன உருவாக்கத்தின் பங்கால் எதிரீடு செய்யப்பட்டது. பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதிகளின் பங்கு கிட்டத்தட்ட 25 சதவீதத்தில் காணப்பட்டது. உண்மை நியதிகளில், நுகர்விலான வளர்ச்சி 2002 இலும், 2003 இலும் முறையே 6.5 சதவீதமாகவும், 6.1 சதவீதமாகவும் விளங்கி, இவ்விரு ஆண்டுகளிலும் நிலவிய நுகர்வோர் நம்பகத்தன்மையை மேலும் அழுத்தியுரைக்கின்றது. 2002 இன் 5.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் உண்மை நியதிகளில், நிலையான மூலதன உருவாக்கத்தில் ஏற்பட்ட 17.9 சதவீத வளர்ச்சியும் 2003 இல் முதலீட்டாளர் நம்பகத் தன்மையிலேற்பட்ட வளர்ச்சியை உறுதி செய்கிறது.

## 2.5 உள்நாட்டுச் சேமிப்புக்களும் தேசிய சேமிப்புக்களும்

தனியார் மற்றும் அரச சேமிப்புக்கள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ.277 பில்லியனாக மதிப்பிடப்பட்டு, முன்னைய ஆண்டை விட 20.9 சதவீத அதிகரிப்பைக் காட்டியதன் மூலம் மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சி தொடர்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எடுத்துக்காட்டியது. 2002 இல் தொடர்பான அதிகரிப்பு 3.3 சதவீதமாகும். தனியார் மற்றும் அரச துறைகள் ஆகிய இரண்டும் இவ்வதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தன. தனியார் சேமிப்புக்கள் 12.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. இவ்வளர்ச்சி பெரும்பாலும் அதிகரித்த இலாபம் மற்றும் சிறந்த செயலாற்றம் என்பன காரணமாக கம்பனித்துறையின் சேமிப்புக்களிலிருந்து பெறப்பட்டது. 2003 இல் நிலவிய நுகர்வோர் நம்பகத்தன்மை அதிகரித்த செலவுக்கும், குறைந்த சேமிப்புக்களுக்கும் இட்டுச் சென்றதால், குடியிருப்பாளர்துறைச் சேமிப்புக்கள் குறைந்த வேகத்திலேயே வளர்ச்சியடைந்தன. இதேவேளை, அரசின் குறைச்சேமிப்புக்கள் 15.7 சதவீதத்தால் மேம்பாடடைந்தன. இதனால் உள்நாட்டுச் சேமிப்பு விகிதம் (உள்நாட்டுச் சேமிப்புக்கள்/ மொ.உ.உற்பத்தி) 2002 இன் 14.5 சதவீதத்திலிருந்து 2003 இல் 15.7 சதவீதத்திற்கு மேம்பாடடைந்தது.

உள்நாட்டுச் சேமிப்புக்கள், தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் என்பனவற்றின் கூட்டுத் தொகையாகிய தேசிய சேமிப்புக்களும் முன்னைய ஆண்டை விட 21.2 சதவீதத்தால், ரூ.375 பில்லியனுக்கு அதிகரித்தன. தேசிய சேமிப்புக்கள் விகிதம் (தேசிய சேமிப்புக்கள்/ மொ.உ.உற்பத்தி) 1 சதவீதப் புள்ளியால் 21.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. உள்நாட்டுச் சேமிப்பின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் எதிர்க்கணியமாக இருந்தபோதிலும், முன்னேற்றமடைந்து, உள்நாட்டுச் சேமிப்புக்களில் உயர் வளர்ச்சியைப் பேண உதவியது. தொழிலாளர் பணஅனுப்பல்களை முக்கியமாக உள்ளடக்கும் தேறிய தனியார் மாற்றல்கள் 2003 இல் கடந்த சில ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட வளர்ச்சியைக் காட்டிலும் குறைந்த வீதமான 10.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இதற்கானதொரு காரணமாக ரூபா நியதிகளில் தொழிலாளர்களின் பணஅனுப்பல்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்திய 2003 இல் ஐ.அ.டொலருக்கெதிராக உறுதியாகவிருந்த ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி விளங்குகின்றது. இதேவேளை 2003 இல் வெளிநாடுகளுக்கு தொழில் பெற்றுச்செல்லும் வெளிச்செல்கைகளிலான வளர்ச்சியும் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தது. 2002 இல் தேசிய சேமிப்புக்களில் 34 சதவீதத்திற்கு வகை கூறிய தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்கள் 2003 இல் 31 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன.

**அட்டவணை 2.5**
**நடைமுறைச் சந்தை விலைகளில் முதலீடும் சேமிப்பும்**

ரூ.மில்லியன்

| வகை | பெறுமதி (ரூ.மில்லியன்) | | | சதவீதமாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 2001 | 2002(அ) | 2003(ஆ) | 2002(அ) | 2003(ஆ) |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 1,407,398 | 1,582,655 | 1,760,280 | 12.5 | 11.2 |
| 2. தனியார் முதலீடுகள் | 228,165 | 264,770 | 299,247 | 16.0 | 13.0 |
| 3. அரச, அரச கூட்டுத்தாபன முதலீடுகள் | 81,519 | 73,013 | 93,693 | -10.4 | 28.3 |
| 4. மொத்த முதலீடுகள் (2+3) | 309,684 | 337,782 | 392,940 | 5.6 | 41.3 |
| 5. தனியார் சேமிப்புக்கள் | 290,982 | 298,229 | 335,292 | 2.5 | 12.4 |
| 6. அரச சேமிப்புக்கள் | -69,066 | -69,002 | -58,176 | 0.1 | 15.7 |
| 7. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 221,916 | 229,227 | 277,116 | 3.3 | 20.9 |
| 8. வெளிநாட்டில் இருந்தான தேறிய காரணிவருமானம் | -23,830 | -25,159 | -18,821 | -5.6 | 25.2 |
| 9. வெளிநாட்டில் இருந்தான தேறிய தனியார் மாற்றல்கள் | 87,902 | 104,938 | 116,307 | 19.4 | 10.8 |
| 10. தேசிய சேமிப்புக்கள் (7+8+9) | 285,988 | 309,007 | 374,601 | 8.0 | 21.2 |
| 11. முதலீட்டு விகிதம் (1இன் சதவீதமாக 4) | 22.0 | 21.3 | 22.3 | | |
| 12. உள்நாட்டு சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 7) | 15.8 | 14.5 | 15.7 | | |
| 13. தேசிய சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 10) | 20.3 | 19.5 | 21.3 | | |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.